விலை ரூபா 1-00 ★


# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 மாசி 4 றவி ஆகிர் 21 இதழ் 4
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16 2 82


இரணைமடுப் பகுதியில்

## பத்தாயிரம் ஏக்கரில் சிறுபோகச் செய்கை

### மேலதிக அரச அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், இரணைமடுக் குள நீர்ப்பாசனப் பகுதிகளில் இந்த ஆண்டு பத்தாயிரம் ஏக்கர் நிலத்தில் சிறுபோகச் செய்கை பயிரிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் இக்குளத்தில் நீர் இல்லாமையால் இப் பகுதியில் சிறுபோக வேளாண்மைச்செய்கை கைவிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். எம். குலநாயகம் மேற்கொண்டுள்ளார்.

இதுசம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில்

(8ம் பக்கம் பார்க்க)

“இருவரிடமும் 2 இயந்திரத்துப்பாக்கிகளும் 2 துப்பாக்கிகளும் இருந்தன

# படகை எடுத்தால் சுடுவோம்;

# நான் பயமுறுத்தப்பட்டேன்!

## ஜீப்பைத் தள்ளிவிடுமாறு

### பிரயாணிகள் பணிக்கப்பட்டனர்”

### இராணுவவீரர் மரணவிசாரணையில் மாலுமி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

“இரண்டுநபர்கள் என்னைநோக்கி ஆயுதங்களுடன் வந்தனர். ஆகாயத்தை நோக்கி ஒருவர் சுட்டார். மற்றவர் ‘படகை எடுத்தால் உனக்கும் சூடு விழும்’ என்று எச்சரித்தார். ஒருவரிடம் இரண்டு இயந்திரத் துப்பாக்கிகளும், ஒரு கைத்துப்பாக்கியும் இருந்தன. மற்றவரிடம் ஒரு நீளமான துப்பாக்கியிருந்தது. இருநபர்களும் நீண்ட காற்சட்டையும், ஷேர்ட்டும் அணிந்திருந்தனர்.

ஆகாயத்தை நோக்கி ஒருமுறை துப்பாக்கிப்பிரயோகம் செய்தவர் வள்ளத்திலிருந்து பிரயாணிகளை இறங்கிவருமாறு கட்டளையிட்டார். அவருக்குப்பின்னல் அந்தப் பயணிகள் பின்தொடர்ந்தார்கள். அப்பிரயாணிகள் அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஜீப் வண்டியை குறிகாட்டுவான்துறைக்குத் தள்ளிக்கொண்டு போவதைக் கண்டேன்.”

குறிகாட்டுவான் — நெடுந்தீவு படகுச் சேவையான ‘‘வடதாரகை’’ என்னும் வள்ளத்தைச் செலுத்தும் மாலுமி ஞானப்பிரகாசம் தேவசகாயம் பிள்ளை (38 வயது) சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நண்பகல் குறிகாட்டுவான் இறங்குதுறையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் பலியான பலாலி இராணுவமுகாமைச் சேர்ந்த இராணுவவீரர் அபயரத்தினபண்டாவின் மரண விசாரணை ஊர்காவற்றுறைநீதிமன்றத்தில் நீதவான் ரி. கே. என். திலகன் முன்னிலையில் நேற்றுப்பிற்பகல் நடைபெற்றது.

யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் எஸ். நவரத்தினராஜா சாட்சிகளை ஆஜர்செய்தார்.

சாட்சிதொடர்ந்து கூறியதாவது:

#### சுமார் 200 பிரயாணிகள்

‘‘13ம் திகதி காலை 11 மணியளவில் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் துறைமுகத்தில்கொண்டுவந்துசேர்த்தேன். அதேவள்ளம் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு பகல் 12-30 மணிக்கு போவதாக இருந்தது 12-15 மணிவரை நான் வள்ளத்தில் இருந்தேன் இத்துறைமுகத்தில் 150க்கும் 200க்குமிடைப்பட்ட பிரயாணிகள் இருந்தனர். நயினாதீவுக்குச்செல்லும் வள்ளமும் அத்துறைமுகத்திலிருந்தது. துறைமுகத்தினருகில் ஒரு மினிபஸ் வெங்காயம் ஏற்றிக்கொண்டிருந்ததைக் கண்டேன் அப்போது ஒருவரும் வள்ளத்தில் ஏறவில்லை.

#### இராணுவ வீரர்கள்

இரண்டு இராணுவ வீரர்கள் ஒரு வள்ளத்தில் ஏறி பார்வையிட்டார்கள். அவர்கள் சோதனையிட்டபின்னர் பிரயாணிகள் வள்ளத்தில் ஏறினார்கள். அப்பொழுது அவர்களிடம் ஆயுதம் எதுவும் இருக்கவில்லை. வடக்குப் பக்கமாக ஒரு ஜீப்வண்டி நிற்பதைக் கண்டேன். அந்த ஜீப் வண்டியில் இராணுவ வீரர் இருந்தாரா என்பது தெரியாது.

‘‘நான் வள்ளத்தில் நிற்கும்போது துவக்கு வெடிக்கும் சத்தம் கேட்டது.

#### கடலில் பாய்ந்தார்கள்

‘‘வெடிச்சத்தம் கேட்டதும் வள்ளத்திலிருந்த இராணுவ வீரர்கள் ‘மகே அம்மே’ என்று சொல்லி கடலில் பாய்ந்தார்கள் அதன் பின்னரும் இரண்டு மூன்று வெடிக்கத்தம் கேட்டது. அதைத்தொடர்ந்து வள்ளத்தில்இருக்கும் வீல் ஹவுஸில் நான் ஒளித்திருந்தேன்

இரண்டு இராணுவ வீரரும் கடலுக்குள் நீந்திச்சென்று, பாலத்தின் கீழிருந்த கல்லின் கீழ் படுத்திருந்தார்கள்.

‘‘வெடிச்சத்தம் கேட்டதும் தங்குமடத்தில் நின்ற சனங்கள் நயினாதீவுக்குச் செல்லவிருந்த வள்ளத்துக்குள்ளும்

(8ம் பக்கம் பார்க்க)

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஸ்தலத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு. என். எச். பி. டி. சில்வா யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

குறிகாட்டுவானில் நடைபெற்ற இராணுவவீரரின் துப்பாக்கிச் சூட்டுக்கொலை சம்பந்தமாக நேரடியாக விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே இவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் நெவில்பெர்னாண்டோ, உடபகுதி இரகசியப பொலிஸ் அதிபர் ஜனுப் எம் டபிள்யூ மகத் ஆகியோருடன், பிரதி பொலிஸ்மா அதிபர் ஸ்தலத்துக்கு விஜயம் செய்திருந்தார். இவர் இருநாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார். (மா)

## கொலைஎன்றுதீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ வீரர் அபயரத்ன பண்டாவின் மரணம் கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மரணவிசாரணை நடத்திய ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் ரி. கே. என். திலகன் தீர்ப்பளிக்கையில் தெரிவித்ததாவது:

‘‘பிரேத பரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையையும், இங்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களையும் கொண்டு இறந்த இராணுவ வீரர் அபயரத்ன பண்டாவின் மரணம் ‘ஆட்கொலை’ என்று தீர்ப்பளிக்கின்றேன்.

பொலிசாரை தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டார். (மா)

## கைவிரலடையாளங்கள் பதிவு செய்யப்பட்டன

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்குப் பின்னர் பயன்படுத்தப்பட்ட மினிபஸ் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்ஸில் காணப்பட்ட கைவிரல் அடையாளங்களை கொழும்பிலிருந்து வந்த கைவிரல் அடையாள நிபுணர்கள் பதிவு செய்துள்ளனர். (மா)

## 30பேர் கைது

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை நண்பகல் குறிகாட்டுவான் இறங்குதுறையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேகத்தின் மீது முப்பது பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

[illegible] கைது [illegible] ட்ட [illegible]வர்கள் நா[illegible] [illegible]களையும் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

## ஆயுதம் காணப்படவில்லை லெப்டினன்ட் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா கவசப்படையின் 2வது லெப்டினன்ட் சங்கபாலா ஆராச்சிகே வக்மணி சிறகுமார திஸநாயக்க (24 வயது) சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

‘‘இம்மாதம் 13ம் திகதி இறந்த அபயரத்ன பண்டா எனக்குக் கீழ் கடமையார்த்து வந்தார். அன்றைய தினம் இறந்தவரை நயினாதீவுக்குச் சென்ற வாகனத்துக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு பணித்தேன்.

அவர் அன்று காலை 7—45 மணியளவில் பலாலிஇராணுவ முகாமிலிருந்து புறப்பட்டார்.

ஜீப் சாரதி லயன் கோப்ரல் சரத்சந்திர வேறொரு பிரிவில் கடமையாற்றி வந்தார். ரூபவனிகசூரியவும் இறந்தவருடன் கூடச்சென்றார். ஜீப் இலக்கம் 5ஸ்ரீ 1283. இந்த வாகனம் செவயர் இலாகாவுக்குச் சேர்மதியானது

இந்த வாகனத்தை சரத்சந்திரவே செலுத்தினர். இராணுவ முகாமிலிருந்து இராணுவ வீரர் வெளியே செல்லும் பொழுது அவர்களுக்கு வேலைச்

(8ம் பக்கம் பார்க்க)

## சட்டவைத்திய அதிகாரி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

‘துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான வீரர் அபயரதன

(8 பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

அன்பு என்பதற்கு மதம், சாதி, இனம்
என்கிற வேறுபாடுகள் எதுவும் கிடையாது.

— மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## தேசிய தொலைக்காட்சி

பிரிட்டிஷ் ராணியை இங்கு வரவழைத்த பொன் விழா, சுதந்திர தினக் கொண்டாட்டம் கூப்பிட்ட இந்திய ஜனாதிபதிரெட்டி, டெஸ்ற் கிரிக்கட், ரூபவாஹினி இந்நான்கும் தனித் தனியே எவ்வளவு பொருத்தமான நிகழ்ச்சியானாலும் மொத்தத்தில் பொருளாதார வீழ்ச்சியில் சிக்கிய அரசின் அவலத்தை மறைக்கவும் ஏமாற்றமடைந்த மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப உதவும் திட்டமெனப் பரவலாகக் கருதப்படுகிறது.

அக்கருத்து அடிப்படை ஆதாரமில்லாததென்று நாம்கொள்ளவில்லை.

எந்த நிதி நெருக்கடியிலும் இந்நான்கு நிகழ்ச்சிகளும் இடம்பெறுவதை நாம்ஆட்சேபிப்பதற்கில்லை; ஒருவேளை புதுவருடத்துடன் நாட்டின் புதிய தலைநகரான கோட்டை ஜயவர்த்தன புரத்தில் திறக்கப்படவிருக்கும் பெருஞ்செலவில் அமைக்கப்பட்ட புதிய பாராமன்றம் செல்வம் கொழிக்கும்காலத்தை காத்திருந்திருக்கலாம் என்பது தவறல்ல.

அது எவ்வாறாயினும் இந் நிகழ்ச்சிகளின் பரபரப்பு பொதுமக்களின் சிந்தனை சக்தியைப்பறிக்குமளவிற்கு வேகமான படக்காட்சி போன்று ஒன்றன்பின் ஒன்றாய் விரைவதையே நாம் கண்டு அஞ்சவேண்டியிருக்கிறது.

முன் இரண்டு நிகழ்ச்சிகளிலும் ஒருபகுதி மக்கள் இந்நாட்டுக்குரியவர் என்ற கோட்பாடு முற்ருக மறுக்கப்பட்டிருக்கிறது. கொழும்பு, அநுராதபுரம், கண்டியாகிய முக்கோணம் இலங்கையின் சுருக்கியதேசியப்படமென்ற வகையில் அவை நடைபெற்றன.

கிரிக்கெட் என்ற நல்ல விளையாட்டுகட்டுப்பாடற்ற ஒருபித்து நிலையை படித்தவர்கள், அரைப்படிப்புடையவர்கள் மத்தியில் ஏற்படுத்தி வருவதும் கண்கூடு. தேர்தல் பிரசாரத்தில் அதுவும் ஒரு மாயாஜாலம்!

இனித் தொடங்கவிருக்கும் 'டெஸ்ற்' விளையாட்டு நேரங்களில் அரசாங்க கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் எத்தனை சதவீதம்அலுவலகங்களில் காணப்படுகிருர் என்பதைக் கணக்கெடுப்பது ஒரு பயன்தரும் பணியாகும்.

நேற்று ஆரம்பமான ரூபவாஹினி சேவை இலங்கைக்கு ஒரு வரப்பிரசாதமென்றும் அதன ஆரம்ப தினத்தை பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டுமென்றும் பிரசாரம் பிறந்து விட்டது.

அந்த உண்மையில் பொதிந்திருக்கும் அபாயமே. மக்கள் புரியவேண்டிய அவசியத்தலையென நாம் கருதுகின்றோம்.

கரும்பு இனிப்பென்ருலும் வேருடன் பறித்துவிடுவது நன்மையானதல்ல. கிரிக்கெட் விளையாடுவதும், டெஸ்ட் ஆட்டம் பார்ப்பதும் கெடுதியாகா. ஆனல் நாள்முழுவதையும்அதனைத் தொழிலாகக் கொண்டு நேரத்தை விரயஞ்செய்தல், பத்திரிகைகளில் நியாயமற்ற நயவுரை எழுதல், ஒருதலைப்பட்ட பிரசாரத்துக்குாய படங்கள் இடம் பெறுதல் இவையெல்லாம் இத்துறையில் ஊழல்களை வளர்ப்பதற்கு கிரிக்கெட் வீரர்கள், ஒரு தேசிய அல்லது சர்வதேச வீரர்கள் என்று கொள்ளும் போலி மனப்போக்கை பொதுமக்கள் மத்தியில் வளர்க்க உதவும்.

இதேபோன்று, இந்தத் தேர்தல் வருடத்தில்ஆரம்பமாகும்'ரூபவாஹினிபொது மக்கள் நலன்கருதி, கல்வி, செய்தி, பொழுதுபோக்கு, பொதுஅறிவு போன்ற விடயங்களைத் திறம்பட உதவினல் இவ்வெகுஜன தொடர்பு சாதனம் இணையற்ற சேவையைப்புரியமுடியும்.

ஆயினும் இதுகாறும் நாம் கண்டதும் கேட்டதும் இந்த நம்பிக்கைக்கு மாருகவே இருக்கின்றன.

அரசாங்க சார்பு பத்திரிகைகள், அரசாங்கத்தின் தேசிய ஒலிபரப்பு இவ்விரு சாதனங்களும் ஆட்சியை ஆக்கவும் அழிக்கவும் வல்லவை என்ற கருத்துக்கமைய, ஆட்சியில் இருந்த கட்சிக்குச் சார்பாகவே 'நெருப்புப்பறக்க' இராப்பகலாக 'வெட்டிக்கொட்டின' அதன் பயனே 1970லும் 1977லும் ஆட்சியிலிருந்த கட்சிகள் படுதோல்வியடைந்தன.

இந்தப் படிப்பினையை 'சூடுகண்ட பூனைகள்' ஏற்றுக் கொள்வதில்லை. எனவே ரூபவாஹினியில் அரசின் புளுகுசாதனைகளும், இமயம் போன்ற அதன் திட்டங்களும், அமைச்சர்களின் நலிந்த கருத்தும பருத்த பேச்சு நிறைந்த கருத்தரங்குகளும், அளவு கடந்துவிடுமமாவென்று அஞ்ச இடமுண்டு.

இலங்கை வானொலியின் செய்தியறிக்கையை கேட்டு காது புளித்தமக்கள், 'ரூபவாஹினி' ஒரு நல்ல மாற்றத்தை அளிக்கும் சேவையாக வேண்டுமெனப் பிரார்த்திப்பது இயல்பு.

கல்வியில் திறமையுடைய ஆசிரியர்கள், தொலைக்காட்சிக்கேற்ற பாவனையில் விளக்கமளிப்பது நன்மை பயக்கும்.

உலகச் செய்தியில் மேனாட்டுப் பாணியைக் கைவிட்டு, ஒரு தேசியமனப் பாங்குடன் செய்திகளைச் செப்பனிட்டு வழங்குவது அவசியம்.

கூட்டுத்தாபனத் தலைவர் எம். ஜே. பெரேரா நேர்மையும், திறமையும் பெற்றவரென்பது நம்பிக்கையூட்டும் செய்தியாகும்.

# மாந்தைமாதாகோயிலும் அதன்பின்னணியும்

மாந்தை புனித அன்னையின் சேத்திரம் திடீரென ஒரு மைலுக்கு அப்பால் இருக்கிறது திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு ஆபத்தாக வந்துள்ள பூசல் கிளம்பியிருக்கிறது. மாந்தை புனித அன்னையின் சேத்திரம் புதுமைகள் புரியும் மருதமடு அன்னையின் சுரூபம் ஆரம்பத்தில் இருந்த இடமாகும். ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன்பே இது கத்தோலிக்கரின் வழிபாட்டு இடமாக இருந்ததென சரித்திரம் கூறுகின்றது. சுருக்கமாகச் சொல்லப்போனல் 1590ம் ஆண்டளவில் முதல் முறையாக இங்கு ஓர் ஆலயம் நிறுவப்பட்டது. 1614 இல் இருந்து இது நிரந்தர ஆலயமாக நிறுவப்பட்டு, ஆரோக்கிய அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்த ஆலயம் 1670ம் ஆண்டு ஒல்லாந்தரால் அழிக்கப்பட்டது.

இந்த ஆலயம் அழிக்கப்படுவதற்கு முன்னரே அங்கு குடியிருந்த இருபது பக்தியுள்ள குடும்பங்கள் மாதாவின் திருச்சுரூபத்துடன் அரசின் கொடுமைக்குத் தப்பிக் கண்டிப் பிரதேசத்திலுள்ள மருதமடுவில் சென்று குடியேறினர். மாந்தை ஆலயத்தை அழித்த பின்னரும் அந்த இடம் இன்றுவரை கோவில்பிட்டி என அழைக்கப்பட்டு வழிபாட்டு இடமாக இருந்து வந்துள்ளது. வடமாகாணத்தின் அரசாங்க அதிபராக இந்தநூற்ருண்டின் ஆரம்பத்தில் கடமை புரிந்த திரு. ஜே. பி. லூயிஸ் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''இன்னும் தெற்கே அடுத்த பகுதியாக மாந்தையில் வாடிவீட்டிற்கு அருகாமையில் அழிக்கப்பட்ட போத்துக்கீசர் ஆலயம் இன்றும் காணப்படுகின்றது. அது வழிப்போக்கர் பயன்படுத்தும் வழிபாட்டுக்குரிய இடமாக விளங்குகின்றது. சில வருடங்களுக்கு முன்பு திரு. பேட் உ. அ. அதிபராக இருந்தபோது அழிந்த ஆலயத்தின் பகுதிகள் இன்னும் பெரிதாக இந்ததுமல்லாமல் திகதி பொறிக்கப்பட்ட ஞாபகக் கல்லும் காணப்பட்டது. ஆனல் அது இப்போது அங்கு காணப்படுவதில்லை.''

மாந்தை கோவில்பிட்டி கத்தோலிக்கரின் பரிசுத்த ஸ்தலமாக எப்போதும் கருதப்பட்டுள்ளது. இதனல்தான் அங்கு வாழும் கத்தோலிக்கரின் வேண்டுதல்களுக்கிணங்கி 1949—1950ல் லூர்த்து அன்னைக்குஒருகெபி கட்டப்பட்டது சிதைக்கப்பட்ட பழைய ஆலயத்தின் ஒரு பகுதி இந்தக் கெபியில் அடங்கியிருக்கிறது. மிகுதியைக் கெபிக்கு வெளியே இன்றும் காணலாம். ஆகவே லூர்து கெபி வழிபடுவதற்கு ஒரு புதிய இடமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனக் கருதுவது முற்றிலும் தவருனதாகும். லூர்து கெபியில் இருக்கும் அன்னைக்கு வணக்கம் செலுத்த வருபவர்களுக்கு வெய்யிலிலும், மழையிலுமிருந்து பாதுகாப்பைக் கொடுப்பதற்கு ஓர் ஆலயம் கட்டி எழுப்புவது இன்றியமையாத தேவையாகும்.

2. 2. 82ல், 3. 2. 82ல் வீரகேசரி, தினகரன், ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் வெளியான தகவல்களின்படி 12 சைவ கழகங்களைச் சேர்ந்த 15 பேர் அவசர தந்திமூலம் மாண்புமிகு ஜனதிபதியிடம் மாந்தையில் கத்தோலிக்க ஆலயத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியை நிறுத்தும்படி கேட்டிருக்கிருர்கள். மேலும், திருக்கேதீஸ்வர ஆலயத்தைச் சுற்றி ஒருமைல் சுற்றளவுக்கு அரசுக்குரிய காணிகளைக் கத்தோலிக்கருக்கோ, வேறு மதத்தினருக்கோ வழங்குவதன் வழியாக அவ்வாலயத்தின் புனிதத்தன்மை அசுத்தப்படுத்தப்படும் என்ற பெயரில் காணியை வழங்க வேண்டாமென்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். இது நியாயமற்றதோடு, குறிப்பாகக் கத்தோலிக்கரின் உணர்வுகளைப் புண்படுத்தும் செயலாக அமைந்துள்ளது.

1964ம் ஆண்டு சேர் கந்தையா வைத்தியநாதன் மாந்தை புனித ஸ்தலத்திலிருந்து கந்தோலிக்கரை அகற்ற முயற்சித்தபோது இந்துக்களுக்கும்: கத்தோலிக்கருக்குமிடையே ஏற்படவிருந்த கலவரத்தைத் தவிர்ப்பதற்காகவே மறைந்த ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகைக்குப் சேர் கந்தையா வைத்தியநாதனுக்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதை அடிப்படையாகக்கொண்டு மேற்கூறப்பட்டவர்கள் தங்கள் கோரிக்கையை விடுத்துள்ளார். ஆனல் இவ்வொப்பந்தம் சட்டப்படி அமுல்படுத்த முடியாமல் அன்றைய காணி அமைச்சரின் நிரந்தர செயலாளரின் அலுவலகத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. அப்பொழுது மன்னர் எம்.பி. யாகவிருந்த திரு. வி. ஏ. அழகக்கோன் இவ்வொப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்து அவ்வேளையில் காணி அமைச்சராகவிருந்த கௌரவ சி. பி. டி. சில்வா அவர்களுக்குத் தனது காரணங்களை எடுத்துக் காட்டி ஒருமகஜர் சமர்ப்பித்தார். அமைச்சர் அதனை ஏற்றுக்கொண்டதன் பயனக அவ் ஒப்பந்தம் கைவிடப்பட்டது. 5. 9. 79ல் ஒரு புதிய ஒப்பந்தம் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி சபைக்கும், மாந்தை மாதா திருப்பணிச் சபைக்கும் இடையில் நிறைவேறியது. இதற்கு திரு. எம். சிவசிதம்பரம், ஏ. அமிர்தலிங்கம் எம். பி.' ஆர். சம்பந்தன், பி. சூசைதாசன் ஆகிய தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மன்னரில் வாழும் கைலாசப்பிள்ளை என்னும் இந்தப் பிரமுகரும் நடுவர்களாக இருந்து பணிபுரிந்தனர். இந்த ஒப்பந்தப்படி நில அளவைப்படம் M N 27ல் காட்டப்பட்டிருக்கும் காணித் துண்டுகள் 1, 2, 3, மாந்தை மாதா திருப்பணிச்சபைக்கு அரசாங்கம் வழங்கவேண்டுமென திருக்கேதீஸ்வரக்கோவில் திருப்பணிச்சபை ஏற்றுக் கொண்டது. ஆனல் அந்த 3 காணித் துண்டுகளிலிருந்து வீதியை அகலமாக்குவற்குத் தேவையான பாகம் கொடுக்கப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது:

இதைத்தொடர்ந்து மாண்புமிகு ஏ. அமிர்தலிங்கம் எம்.பி. 18—3—79 இல் இவ்வொப்பந்தத்தைப் பற்றிக் காணி, காணி அபிவிருத்தி அமைச்சருக்கு இல. LO/G 47 (२) கொண்ட கடிதமூலம் அறிவித்தார் 5—9—79 இல் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி மாந்தையில் புதிய ஆலயம் அமைக்கும் முயற்சி திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபையின் சம்மதத்துடன் 8—9—79இல் ஆரம்பிக்கப்பட்டது. சேர் கந்தையா வைத்தியநாதன் 1964ம் ஆண்டிலும், திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிச் சபையினர் 1979ம் ஆண்டிலும் நில அளவைப்படம் இல. MN 27 இல் உள்ள 3வது துண்டை கத்தோலிக்கரின் வழிபாட்டுத் தேவைக்குக் கொடுக்க உடன்பட்டார்கள். தற்போது மாந்தை கோயில் பிட்டியில் கட்டப்படும் ஆலயம் இந்த 3வது துண்டிலேயே அமைகின்றது. ஆகவே கத்தோலிக்கர்கள் பிழைசெய்தார்களென்று கூறுவதற்கு இடமில்லை.

திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு ஏறக்குறைய 100 ஏக்கர் காணி தேவை என்று கேட்கப்படும் கத்தோலிக்கரின் வழிபாட்டிற்கு சிறிய அளவிலான 4 ஏக்கரையும் 26 குழிகளையும் ஏன் கொடுக்கமுடியாது?

சமய ஒற்றுமையில் நம்பிக்கை கொண்டவர்கள் அனைவரும் எமது கோரிக்கையில் நியாயம் காண்பார்களென்பது நிச்சயம்.

சி. ஆர். ஈ. ஜெயராஜா.
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்.
மாந்தை மாதா
திருப்பணிச் சபைத் தலைவர்.

# மக்கள் கருத்து

## அனைவருக்கும் ரிய ன்னை

மாந்தை மரியன்னையின் குளிர் நிழலில் வாழ்பவர்கள் மன்னர் மறைமாவட்டத்தில் வாழும் அனைத்து மக்களும் என்பதை கூறுவதில் பெருமைப்படுகின்றேன்.

கததோலிக்கரென்ன? இந்து சகோதரர்களென்ன? முஸ்லிம் பெருமக்களென்ன? அனைவரும் அஞ்சல் செய்து தஞ்சம் அடையும் தாய்தான் மாந்தை மரியன்னை.

பாலாவி தீர்த்தக்கரையிலே இருந்தது ஒரு குகை. இது மறுக்கமுடியாத, மறைக்கமுடியாத உண்மை: இக்குகை எப்போது, யாரால் உருவாக்கப்பட்டது? இக்குகையில் வாழ்ந்த நிலைத்த, சரித்திரத்துடன் சம்பந்தப்பட்ட சமய அடையாளமென்ன? புதுமை என்ன? பெருமை என்ன? என்பதை நாம் கடந்த கால சரித்திரக் கண்கொண்டு நோக்கவேண்டாமா?

(5ம் பக்கம் பார்க்க)

## சிறப்பாக நடைபெற்ற ஆலய உற்சவம்

(மன்னர்)

மன்னர். மாந்தை மாதா ஆலய வருடாந்த திருநாள் உற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வருடாந்தத் திருநாள் உற்சவத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை நற்கருணைத் திருவிழாவும், சர்ப்பிரசாதத் திருவிழாவும் இடம்பெற்றது.

திருநாள் திருப்பலிப்பூசை மன்னர் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகத்தினல் ஒப்புக் கொடுக்கப்பட்டது. மாந்தை மாதா திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் இடம்பெற்றது.

## கோலான் குன்றுகளில் குடியிருப்புகள்

டெல்அவிவ் பெப், 15

சிரியாவிடமிருந்து ஆக்கிரமிப்புச் செய்த கோலான் குன்றுகளில் புதிய குடியிருப்புக்களை இஸ்ரேல் ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது

# சாரணியர் இயக்க 75-வது ஆண்டு விழா

(புலோலி)

சாரணியர் இயக்கத்தின் 75வது ஆண்டுக் கொண்டாட்டமும், சாரணியர் இயக்கத்தை ஆரம்பித்த பேடன்பவல் பிரபுவின் 125வது பிறந்ததினக் கொண்டாட்டமும் இம்மாதம் 25ம் திகதி யாழ் மாவட்ட சாரணியர் இயக்கத்திஞல் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இயக்கத்தின் தலைமையகத்தில் கொண்டாடப்படவுள்ள இவ்விழாவிலே சிறப்பு அம்சமாக பழைய சாரணீயர் சந்திப்பு இடம்பெறும். விழாவையொட்டி ஞாபகார்த்த மலரொன்றும் வெளியிடப்படுவதுடன், யாழ்மாவட்ட சாரணீயர்களால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் பொருட்காட்சியும், சாரணீய அணிவகுப்பும் இடம்பெறுமென யாழ். மாவட்ட சாரணீயர் இயக்கப் பணிப்பாளர் திரு. எஸ். கந்தமூர்த்தி தெரிவித்தபர்.

யாழ். பழைய பூங்காவில் இம் மாவட்ட சாரணீய கிளைச் சங்கத்திற்கான கட்டிடமொன்று விரைவில் ஸ்தாபிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் திரு. கந்தமூர்த்தி தெரிவித்தார்.

# கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் மறுசீரமைப்பு

(புலோலி)

கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களை மறுசீரமைப்புச் செய்தல், நிதி நிலவரங்கள் ஆகிய விடயங்கள் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா குழுவொன்றை நியமித்துள்ளார்.

இக்குழு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை அனுப்பி, அவ் அறிக்கை மீதான அவதானிப்புகளை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளது.

இதற்கிணங்க மீனவர் கூட்டுறவுச்சங்கங்கள் அவ் அறிக்கை மீதான அவதானிப்புகளை குழுவிற்கு அனுப்பி வைத்து வருகின்றன.

# சமத்துவ உரிமை கோரி நீக்ரோக்கள் ஊர்வலம்

நியூயோக், பெப். 15

அமெரிக்க நீக்ரோ தலைவரான மார்ட்டின் லூதர் கிங்கின் வழியில் செல்ல இன்றைய நீக்ரோ தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதற்கு அமைய பதினேழு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றது போல் சமத்துவ உரிமைகள் கோரிஊர்வலங்கள் நடைபெறவுள்ளன.

அமெரிக்க அரசியலமைப்பின்படி, மூன்றில் ஒன்று கும் அதிகமானவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையிருந்தபோதும், வாக்காளர் பட்டியலில் இவர்கள் இடம் பெறவில்லை.

பெரும்பான்மையினரான கறுப்பர்களுக்கு உழைக்கும் உரிமை இல்லை. வெள்ளையரைக் காட்டிலும் கறுப்பர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. மூன்றில் ஒரு நீக்ரோ குடும்பங்கள் உத்தியோகபூர்வமான வறுமை மட்டத்துக்குக் கீழே வாழ்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

மார்ட்டின் லூதர் கிங் எதற்காகப் போராடிஞரோ அவை யாவற்றிலிருந்தும் நீக்ரோக்கள் விலக்கப்பட்டுள்னனர். சமத்துவம், விடுதலை, உழைக்கும் உரிமை கல்வி ஆகியவற்றிலிருந்து அவர்கள் விலக்கப் பட்டுள்ளனர் என்று நீக்ரோ கவிஞரான அன்டார் மெப்ரி எழுதியுள்ளார்.

அமரர் ஜி. ஜீ.க்குப்பின்

# தமிழ்பிரதேசவிருத்திக்கு உருப்படியாக எதுவும் இல்லை

## தமிழ்தலைவர்களைச் சாடுகிறுர் இ. சோ. சமஷ்டிக் கட்சித் தலைவர்

(கொழும்பு)

''அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் உருவாக்கிய காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகளுக்குப்பின் தமிழ்த் தலைவர்கள் தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய உருப்படியான நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை''.

இவ்வாறு அமரர் ஜி.ஜி.யின் 5வது நினைவு தினத்தை ஒட்டி இலங்கை சோசலிஸ சமஷ்டிக் கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய கட்சித்தலைவர் திரு. என். கனகசூரியர் குறிப்பிட்டார்.

''கடந்த 25 வருடங்களாக இப்போதைய தமிழ்த் தலைவர்கள தமிழ் மக்களுக்கு செய்தவைகளை நோக்கிடும்போது, அமரர் ஜி.ஜி. தமிழ்மக்களுக்கு செய்த தொண்டுபோல் வேறு ஒரு தமிழ்த் தலைவர்களும் செய்யவில்லை என்பது வெள்ளிடைமலை.''

வடமாகாணத்தில், தீவுப்பகுதிகளையும் வன்னிப் பகுதியையும், கிளிநொச்சிப் பகுதியையும் மூன்று வெவ்வேறு மாவட்டங்களாகப் பிரித்து, அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்த அமரர ஜி.ஜி. எண்ணிஞர் ஆனல் முல்லைதீவுப் பகுதி மாத்திரம் மாவட்டமாகி அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றன. ஆனல் தீவுப்பகுதிகளும், கிளிநொச்சிப்பகுதியும் வெவ்வேறு மாவட்டங்களாக்கப்படவில்லை. இலங்கை சோஷலிச சமஷ்டிக்கட்சி, எந்த அரசாங்கத்தோடும் இணைந்து மிக விரைவில் கிளிநொச்சிப் பகுதியையும் தீவுப்பகுதியையும் அபிவிருத்தி செய்ய பாரியதிட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது.

தமிழ்த்தலைவர்கள் தமிழ் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமே தவிர அவர்களை வெட்டிப் பேச்சுக்களில் மயங்கவைக்கக்கூடாது.''

(இ)

# பாரதி இங்கிலாந்தில் பிறந்திருந்தால்.....!

''இங்கிலாந்தில் அவர் பிறந்திருந்தால் அங்கு அவர் அரசவைக் கவியாக இருந்திருப்பார். எங்காகிலும் சுதந்திர நாடொன்றில் அவர் பிறந்திருந்தால் உயர் சிறப் புகளைப்பெற்றிருப்பார் வங்காளத்தில் அவர் பிறந்திருந்தால் அவரும் ஒரு ரவீந்திரநாதத தாகூராகியிருப்பார். எவ்வாறுயினும் தமிழ் நிலைத்திருக்கும் வரை தமிழ் நாட்டில் தேசப்பற்று சிறிதாகிலும் இருந்துவரும் வரையில் சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளும்உயிரோடுஇருந்துவரும்.

1921ம் ஆண்டு தமது 39 வயதில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் காலமானபொழுது அப்போதைய தமிழ்நாட்டுத் தலைவர்களிலொருவரான திரு. எஸ். சத்தியமூர்த்தி இவ்வாறு எழுதியிருந்தார்.

அன்றைய இந்து பத்திரிகை பின்வருமாறு எழுதியது, ''சுப்பிரமணிய பாரதியின் மரணத்திஞல் நாடு சிறந்த தேசியவாதியை, ஒரு மாபெரும் சிந்தனையாளரை, உணர்ச்சியைத் தூண்டும் பேச்சாளரை சக்திவாய்ந்த எழுத்தாளரை இழந்துவிட்டது'' என்று திருநெல்வேலி மாவட்டத்தைச்சேரும. இங்கு பாஞ்சாலங்குறிச்சி, ஓட்டப்பிடாரம், எட்டயபுரம் ஆகிய இடங்கள் சரித்திரத்தில் இடம் பெற்ற ஊர்களாகிவிட்டன

இவ்வீர புருஷர்கள் முதலாமவர் வீரபாண்டிய கட்டபொம்மனுவார் — கெட்டி பொம்மநாயக்கர் என்றும் அழைப்பார்கள். இவரது வீர வரலாறே ஒட்டப்பிடாரத்தை சேர்ந்த வ உ சிதம்பரப் பிள்ளை (கப்பலோட்டிய தமிழர்) யையும் எட்டயபுரத்தைச்சேர்ந்த சி, சுப்பிரமணிய பாரதி(தேசிய புரட்சிக்கவிஞர்)யையும் உணர்வுகொண்டு எழச் செய்தது எனலாம்

இவர்களும் இவர்க காலத்து சுதந்திரப் போராட்ட வீரர்களும் தமக்கே உரிய தனித்துவமான வீர சாகசங்களை தம் வழிகளில் செய்திருக்கலாம். ஆனல் சுதந்திரத்திற்காக அவர்கள் கொண்டிருந்த தாகமும் தம்மொழி பண்பாட்டின்மீது வைத்திருந்த பற்றும் ஒரேவிதமானவை. அதில் மாறுபாடு இல்லை இந்தப்பற்றின் காரணமாகவே அவர்கள் வீரபுருஷர்களானுர்கள். பத்திரிகையாளனுக்கிற்று- பத்திரிகைத்துறை அவரைதேசீய வீரராக்கிற்று. என்றுலும் சுதேசமித்திரனில் தமது ஆக்ரோஷமான அரசியல் கருத்துக்களை வெளியிடுவதில் சில தடங்கல்கள் இருப்பதை பாரதி உணரலானுர்.

1904ல் மதுரைக்கு வந்தார், 1905ல் அவரது தமிழ்நடையில் எளிமை மெருகேறத்தொடங்கியிருந்தது 1908ம் ஆண்டளவில் புதி நடையை திறமாகக் கையாளும் முன்னேடியாகத் திகழ்ந்தார்.

1906 மே மாதத்தில் எஸ். என் கிருமலாச்சாரி என்பவர் ஆரம்பித்த 'இந்தியா' பத்திரிகையில் சுதந்திரமாக எழுதும் வாய்ப்பு கிடைத்தது. இச்சமயத்தில்தான் பாரதியின் திறமையெல்லாம் வெளிப்பட ஆரம்பித்தன,

இந்தியா பத்திரிகை சுதேசி இயக்கத்தின் புரட்சிக்கருத்துக்களைத் தாங்கி வெளிவரத் தொடங்கியிருந்தது ''சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம்'' என்று அது குரல் உயர்த்திக் கூவிற்று. வாரசஞ்சிகையான இந்தியா 4,000 பிரதிகள் விற்பனையாயிற்று. அந்தக் காலத்தில் இது பொருமைப்படக்கூடிய எண்ணிக்கையாகும். அதன் விலை ஒன்பது பைசா (வருடச்சந்தா 31 ரூபாய்) அரசியல்கட்டுரைகள் கேலிச் சித்திரங்களுக்காகவே இப்பத்திரிகை அதிகமாக விற்பனையாயிற்று.

தேசபக்தர்களின் நடவடிக்கைகளுக்கு சுதந்திரப் போராட்டச் செய்திகளுக்கும் இந்தியா அதிக இடம் கொடுத்தது குறிப்பாக [illegible] தம்பரம் பிள்ளையின் சுதேசக் கப்பல் கம்பனி இயக்கம் தீவிர பிரசாரம் பெற்றது. இதனல் இப்பத்திரிகையின் [illegible] பிரிட்டிஷ் அரசு [illegible] செலுத்தத் தொடங்கியிருந்தது

பாரதியாரின் கரு [illegible] கேலிச்சித்திரமாக வெளிவந்த போதுதான் இந்திய [illegible] கைக்குச் சங்க [illegible] தொடங்கியது

இந்தியமக்கள் [illegible] வாடுவதை [illegible] வெளி [illegible] பல்களில் இந்திய [illegible] எடுத்துச் [illegible] அக்கேலிச்சித்திர [illegible] ருந்தது

### பிரிட்டிஷ் அரசு ஆத்திரம்

அது மாத்திர [illegible]

### ''என்று தணியும் இந்தச் சுதந்திரதாகம் என்றுமடியும் எங்கள் அடிமையின் மோகம்''

என்று கேட்டதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் அவனை சிறையில் அடைக்கவலை வீசித் தேடியது. சுதந்திரத்தாகம் கொண்ட அந்தக் கவிஞன் பிறந்தகத்தை விட்டுத் தலைமறைவாய் ஓடி அண்டை நாட்டில் அடைக்கலம் புகுந்தான். என்றுலும் அந்நியரின் ஆட்சிக்கு எதிராக அவன் தொடுத்த போராட்டம் ஓயவில்லை. வேற்று நாட்டு பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டே சொந்த நாட்டின மக்களை விடுதலை உணர்வூட்டி வீறு கொள்ளச் செய்வதில் அவன் ஓய்ந்துவிடவில்லை.

அன்று அவன் பாடி வைத்த பாடல்கள் இன்றும் கூட உலகம் முழுவதிலும் விடுதலை கோரி வீர போராட்டங்கள் நடத்தும் மக்களுக்கு உணர்வூட்டும் கருவூலங்களாய் உதவிவருகின்றன. காலத்தால் அழியாத அந்தக் கவிதைகளை ஆக்கித்தந்த அந்த மகாகவியின் நூற்றுண்டு இப்பொழுது கொண்டாடப்பட்டு வருகின்றது. பாரதியின் வாழ்க்கை வரலாற்றின் சில சுவையான அம்சங்கள் இக்கட்டுரையில் தொகுத்துத்தரப்படுகின்றன திரு எஸ். முத்தையா என்பவர் 'எசைட்' என்ற ஆங்கில ஏட்டில் எழுதிய கட்டுரையிலிருந்து இக்கட்டுரைக்கான தகவல்கள்எடுக்கப்பட்டன.

— 'மனு'

### கடும்தமிழ்

பிற்காலத்தில் தமிழ்க்கவிதைத் துறையில் புரட்சியை எளிமையைப் புகுத்திய பாரதியின் முதல் கவிதை அதாவது முதன்முதல் அச்சில் வெளியாகியுள்ள அவரது கவிதை கரடுமுரடான பல்லு உடைக்கும் தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது ஆச்சரியமாகவிருக்கிறது. அக்கவிதை விவேகபானு என்ற மதுரை மாதச்சஞ்சிகையொன்றில் வெளியாகியுள்ளது. 'தனிமை இரக்கம்' என மகுடமிடப்பட்டுள்ள அக்கவிதையின் கர்த்தா எட்டயபுரம் சி. சுப்பிரமணியபாரதிஎனக் குறிப்பிட்டுள்ளது. 14 வரிகளைக் கொண்ட இக்கவிதையை சாதாரண வாசகர்கள் விளங்கிக்கொள்ளமாட்டார்கள் என்பதால் பத்திரிகையின் ஆசிரியர் பாரதியின் கவிதைக்கு அடிக்குறிப்புகளும் வெளியிட்டிருந்தார்களாம்.

பாரதியின் பிற்காலத்திய இலகுதமிழ் நடைக்கு இது மிகவும்முரண்பட்டது தான்.

1904ம் ஆண்டு சென்னைக்கு வந்து பத்திரிகையாளராகப் பணிபுரிய ஆரம்பித்ததின்பின்னர்தான் பாரதியின் தமிழ் நடையில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது என்றுர் ஒருதிறனய்வாளர் சுதேசமித்திரனுடன் பாரதி தொடர்புகொண்டிருந்த காலத்தில் இம்மாற்றம் நிகழ்ந்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக்கிளர்ந்தெழுந்த தமிழ்நாட்டுத் தலைவர்களில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் சரித்திரப்புகழ்பெற்ற மூன்று வீரர்களைப் பெற்றிருந்தபெருமை அவர்களைப்பற்றிய வீரகாவியங்கள் எழுந்தன

மகாகவிதமிழ்நாட்டின்மிகச் சிறந்ததே பக்தரும்மகாகவிஞருமான சுப்பிரமணிய பாரதியார்1882ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி எட்டயபுரத்தில் பிறந்தார் இவரது தந்தையார் வணிகத்துறையில் ஈடுபட்டு செல்வத்தை இழந்தவர் என்றுலும் தமிழில் பாண்டித்தியம் பெற்ற புலவராகவிருந்தார். பாரதி திருநெல்வேலியிலும் பின்னர் காசியிலும் கல்வி பயின்றுர். குடும்ப நிலை காரணமாக வேலைதேட வேண்டியிருந்தார். சில ஆண்டுகள் எட்டயபுரம் ராஜாவிடம் வேலைபார்த்தார் பின்னர் மதுரையில் ஒரு ஆறுமாத காலம் ஆசிரியர் தொழில் பார்த்தார் இந்தக்காலத்தில் தான் தமிழில் கவிதைகள் புனைந்து பத்திரிகைகளுக்கு அனுப்பத்தலைப்பட்டார் அப்படி முதலில் வெளியான 'தனிமை இரக்கம்' என்ற கவிதை அந்தக் காலத்துக்கேற்றதமிழில் அமைந்திருந்தது.

சுதேசமித்திரன் பத்திரிகையை சுப்பிரமணிய ஐயர் என்பவர் நடத்திவந்தார் இவருடன் தொடர்பு கொள்ளத் தொடங்கிய பின்னர் பாரதியின் தமிழ் எழுத்து நடையில் புரட்சிகரமான மாற்றம் தோன்ற ஆரம்பித்தது மாத்திரமல்ல. [illegible] வும் மாறலானுர் [illegible] தான் அரசியலி [illegible] வேண்டிய சூழ்நிலை உருவாகிற்று.

### பத்திரிகையாளன்

சுதேசமித்திரன் [illegible]

81 மே-ஜூன் யாழ். வன்செயல் இழப்பு:

# விபரங்களை வெளியிடுமாறு பண்டிதர் கோருகின்றார்

(கொழும்பு)

கடந்த ஆண்டு மே மாதம் 30ம் திகதி முதல் ஜூன் மாதம் 12 ம் திகதிவரை யாழ். மாவட்டத்தில் இடம் பெற்ற வன்செயல்களினால் ஏற்பட்ட நஷ்டங்கள் பற்றிய விபரங்களை வெளியிடுமாறு ஊர்காவற்றுறை எம் பி, பண்டிதர் கா. பொ. இரத்தினம் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பஉள்ளார்.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகத்திடம் இதுபற்றிக் கேட்பதறகு பண்டிதர் இரத்தினம் முன் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

யாழ். வன்செயல் சம்பவங்களினால் ஏற்பட்ட நஷ்டம் பற்றி யாழ் அரசாங்க அதிபர் திரட்டிய விபரங்களை ஆதாரமாகக் கொண்டு பொருள் நஷ்டம் அடைந்தோரினது பெயர் முகவரி. அவர்கள் அடைந்த நஷ்டத்தொகை அவர்கள் எவ்வகையில் நஷ்டமடைந்தார்கள் என்பது பற்றிய விபரங்களை வெளியிடுமாறே பண்டிதர் இரத்தினம் கேள்விஎழுப்ப உள்ளார்.

இம்மாதம் 2 ம் திகதி பாராளுமன்றத்தில் கேட்பதற்காக இந்த முன் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. (இ)

## பஸ் திடீர்மறைவு

(கடவத்த)

கடந்த புதன்கிழமை கடவத்த பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்வண்டி அடுத்தநாள் மாலை அங்கிருந்தும் காணமற் போய்விட்டதாகப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணமற்போன மேற்படி பஸ் வண்டியைக் கண்டு பிடிப்பதில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். (கி)

## கடலில்தத்தளித்த இருவர் தாகத்தை தீர்க்க சிறுநீரை அருந்தினர்

மணிலா, பெப் 15

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்று பத்து நாட்கள் அங்கே தத்தளித்த இருபிலிப்பைன்ஸ் நாட்டு மீனவர்கள் தாகத்தைத் தீர்த்து உயிர் வாழ்வதற்காக தமது சிறுநீரைப்பருகினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மொஹமட்கமங் (வயது 35) ரெக்ரொக் உக்கா (வயது 28) ஆகிய இருமீனவர்களுக்குமே மேற்படி அனுபவம் ஏற்பட்டது.

பத்து நாட்கள் கடலில் தத்தளித்த இவ்இருவரும் முதலில் பிடித்த மீன்களையே சாப்பிட்டனர் என்றும் பின்னர் அம்மீன்களும் தீர்ந்துவிடவே பசியைத் தீர்க்க செய்வதறியாது தமது சிறுநீரைப் பருகினரென்றும் தெரிவித்தனர்.

கடலில் தத்தளித்தவேளை பலசரக்குக் கப்பல்களைக் கண்டு உதவி கோரி சைகைகள் செய்த போதிலும் அவை தம்மைப் பொருட்படுத்தவில்லை யென்றும் இறுதியாக அருகிலிருந்த எண்ணெய்தளமொன்றைச் சேர்ந்த படகொன்றே தம்மைக் காப்பற்றியதென்றும் அறிவித்தனர். (கி)

நாரந்தனை கொலை வழக்கு:

# "4-ம், 2-ம் எதிரிகள் மாமாவை வெட்டியதாக மருமகன் கூறினார்"

### இறந்தவரின் மனைவி சாட்சியம்

(ஊர்காவற்றுறை)

''இவ்வழக்கில் இறந்தவர் எனது கணவர். கடந்த வருடம் மே மாதம் 18ம் திகதி இரவு பத்தரை மணியளவில் நான் வீட்டிலிருந்தேன் எனது கணவர் அப்போது வீட்டில் இல்லை. அவர் பொலிஸ் விசாரணைக்காக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துற்கு சென்றிருந்தார். நான் வீட்டில் இருக்கும்போது என்னுடன் எனதுமகன் எஸ்மனும், மகள் பற்றிமாவும் வேறுசில குழந்தைகளும் இருந்தார்கள்''.

மேற்கண்டவாறு வடக்கு நாரந்தனையைச்சேர்ந்த இராசேந்திரம் என்பவரை கத்தியால் வெட்டியும், மண்டாவினால் குத்தியும் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் இறந்தவரின் மனைவியான எலிசபெத் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு, ரீ கே. என். திலகன்முன்னிலையில் நடைபெற்றது.

இறந்தவரின் மனைவி எலிசபெத் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

''மரியதாஸ், வீட்டில் மாமாவின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தார். விசாரணைக்குச்சென்ற என் கணவர் இரவு சுமார் பத்து மணியளவில் திரும்பி வந்தார். மருமகனே என்று கூப்பிட்டு சத்தம் கேட்டது. அப்படிக் கேட்டதும் நான் எனதுமகன் எஸ்மனுடன் வெளியே வந்து சத்தம் கேட்ட திசையைநோக்கி ஓடினேன். எனக்கு சுகவீனம் என்றபடியால் வேகமாக ஓடமுடியவில்லை. அப்போது எனதுமருமகன் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து வீட்டை நோக்கி ஓடிவந்தார் அப்போது அவர் தேவசகாயமும், ரீமனும் மாமாவை வெட்டிப்போட்டார்கள் என்று சொல்லிக்கொண்டு துணி எடுக்க ஓடிவந்தார்கள்.

''இங்கு நான்காம் எதிரி தேவசகாயம், 2ம் எதிரி ரீமன் நான் சம்பவம் நடந்த இடத்துக்கு சென்றபோது 3ம் எதிரி செல்வராசா கீழே விழுந்து கிடந்த எனது கணவனுக்கு மண்டாவால் குத்துவதைக் கண்டேன். அவர் அப்படிக் குத்தும்போது பூலோகராசா, ரீமன், தேவசகாயம் ஆகியோர் பக்கத்தில் நின்றார்கள். பூலோகராசா என்பவர் 1ம் எதிரி அன்று நல்ல நிலவு வெளிச்சம் ஆனபடியால் எல்லோரையும் அடையாளம் காண முடிந்தது. உடனடியாக எங்களைக்கண்டதும் எல்லோரும் ஓடிவிட்டார்கள். தேவசகாயம், ரீமன் ஆகியோரின் கையில் கத்திகள் இருந்தது. பூலோகராசாவின் கையில் எதுவும் இருந்ததை நான் கவனிக்கவில்லை. 3ம் எதிரியின் கையில் மண்டா இருந்தது. அவர்கள் ஓடியபின் நான் இறந்த எனது கணவர் விழுந்த இடத்தில் நின்றேன். கழுத்திலும் நெஞ்சிலும் இடது கையிலும் அவருக்கு காயம் இருந்தது, இறந்த கணவருடன் நான் கதைக்கமுயற்சித்தேன். ஆனால் அவர் கதைக்கவில்லை. எனது மருமகன் எனதுகணவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல ஒரு வாகனம் கொண்டுவந்தார். அப்படி கொண்டு செல்லுமுன் அவரின் உயிர் பிரிந்து விட்டது. பின் பொலிசுக்கு சென்றார். பொலிசார் சம்பவம் நடந்த இடத்துக்கு வந்தார்கள். அவர்களின் விசாரணையின்போது எனது வாக்குமூலத்தை பதிவுசெய்தார்கள். இந்தநான்கு எதிரிகளும் எனது உறவினர்கள். ரீமனின் தகப்பனுக்கும் எனது கணவருக்கும் தொழில் விஷயமாக பிரச்னை இருந்தது. இதனால் எனது கணவன் ரீமனின் தகப்பனுக்கு கத்தியால் கீறினார்'' என்றார்.

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. நவரத்தினராசா சாட்சிகளை நெறிப்படுத்தினர் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி தம்பிரத்தினம் சட்டத்தரணி திரு, பி. கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜரானார். இறந்தவர்களின் நலன்களை கவனிக்கசட்டத்தரணி ஸ்ரீகாந்தா ஆஜரானார் சாட்சி தொடர்ந்து எதிரிகளின் சட்டத்தரணியால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

## பாரதி....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கைவிலங்குகள் போகும்
என்றெம தின்னல்கள்
தீர்ந்து பொய்யாகும்
அன்றொரு பாரதம்
ஆக்க வந்தோனே,
ஆரியர் வாழ்வினை
ஆதரிப்போனே,
வெற்றிதரு நந்துணை
நின்னருளன்றோ
மெய்யடியோம் இன்னும்
வாடுதல் நன்றோ!!

பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் இந்த இரு பிரசுரங்களுக்காகவும் எம். ஸ்ரீனிவாசன் என்பவர் மீது அரசு வழக்குத் தொடர்ந்தது. பத்திரிகையின் உண்மையான ஆசிரியர்தாமில்லையென்றுமறுத்தபோதும் ஸ்ரீனிவாசனுக்கு ஐந்து ஆண்டு கடுழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேசமயம் பாரதியார் மீதும் 'வாரண்ட்' பிறப்பித்து கைது செய்வதற்கு அரசு முயன்றுகொண்டிருந்த வேளையில் சிலநண்பர்களினதும்நலன் விரும்பிகளதும் ஆலோசனையின் பேரில் பாரதியார் புதுச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தார். ஒரு வாரத்துக்குள் இந்தியா பத்திரிகையின் யந்திரசாதனங்களும் இரகசியமாக அங்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டன. இந்தியா பத்திரிகை அங்கிருந்து வெளிவரத் தொடங்கியது. சென்னைக்குரயில்மூலம் அதன்பிரதிகள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. முன்னிலும் பார்க்க அதற்கு கிராக்கிஅதிகரித்தது. சென்னை அரசாங்கம் இந்தியா பத்திரிகைக்குத் தடைவிதித்து அதன் பிரதிகளைக் கைப்பற்றி தீயிட்டு கொளுத்தியது.

சென்னையில் தடைவிதிக்கப்பட்டதால் பத்திரிகையின் வருமானமும் பாதிப்புக்குள்ளாகியது. அதேசமயம் பாரதிக்கு பத்திரிகை நிர்வாகிகளுடன் அதிருப்தி ஏற்பட்டது. ஊழியர்களைக் குறைத்தும் வேலையிலிருப்பவர்களை அதிகநேரம் வேலைசெய்யும்படியும் நிர்வாகம் கோரியது. காரியாலய நேரத்தைக் கடைப்பிடித்துப் பணியாற்றும்படி நிர்வாகிகள் பாரதியாரையும் கேட்டுக் கொண்டனர்.

தாம் கொடுக்கும் விஷயங்களுக்கேற்பவே வேதனம் தரப்படுவதாகவும் முழுநேரம்பணியாற்றுவதாயின் அதிக வேதனம் தரவேண்டுமென்றும் பாரதி கோரினார்.

உரிமையாளர் ரங்காச்சாரிக்கும்பாரதிக்குமிடையில்வாய்த்தர்க்கம் முற்றியது. ஒரு கட்டத்தில் ரங்காச்சாரி கோபத்தில் கையை ஓங்கியதாகவும் கூடகூறப்படுகின்றது. மோதல் ஏற்படாதவாறு அங்கிருந்தவர்கள் இருவரையும் பிரித்தார்கள். அதன்பிறகுஇந்தியா பத்திரிகாலயத்தின் பக்கமே வருவதில்லையென பாரதியார் சங்கல்பம்செய்தார். ஒருகாலத்தில் சக்திமிக்க பத்திரிகையாக விளங்கிய இந்தியா அடுத்த ஆண்டே முடங்கிப்போய்விட்டது.

அதன்பின்னர் பாரதி அதிகமாகக் கவிதைகள் எழுதுவதில் ஈடுபட்டார். அவரது முக்கியமான ஆக்கங்கள் 1912ம் ஆண்டளவிலயே உருப்பெற்றன. வேதனத்துக்காக சில பத்திரிகைகளிலும் வேலை செய்தார். சைகோன் சின்னையா என்பவரின் சர்வோதயம் பத்திரிகையில் சிலகாலம் கடமையாற்றினார். பத்திரிகை விற்பனை அதிகரித்தது மீண்டும் வேதனப் பிரச்னை எழுந்தது, அங்கிருந்து விலகி விஜயா என்ற பத்திரிகையில் சேர்ந்தார், இதுவும் சென்னை அரசினால் விற்பனை தடை செய்யப்பட்டதினால் மூடவேண்டியதாயிற்று, சைகோன் சின்னையாவுடன் சேர்ந்திருந்த காலத்தில் பாரதி ஆரம்பித்த 'கர்மயோகி என்ற அவரது சொந்தப்பத்திரிகையும் சோர்வடைந்தது.

இந்திய அரசுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு புதுச்சேரியில் குடியேறி மறைந்து வாழ்ந்த இந்தக்காலத்தில் பாரதியின் கவிதை உள்ளம் மேலும் பக்குவமடைந்தது கர்மயோகியில் அவர் வெளிப்படுத்திய கவித்துவம் வளர்ச்சியுற்றது. மேலும் அவரது எழுத்தின் வேகமும் தணியலாயிற்று.

இவர் மாத்திரமன்று அவர் காலத்தில் விடுதலை வீரர்கள் பலர் இவ்வாறு நிதானப்போக்குக்குத் திரும்பியிருந்தார்கள் வ. உ. சி. சிறையிலிருந்து விடுதலையாகி எழுத்துத்துறையில் ஈடுபட்டிருந்தார், ஒரு காலத்தில்அரசியல் பூகம்பமாக விளங்கிய அரவிந்தகோஷ் புதுச்சேரியிலேயே தங்கிஆச்சிரமம்அமைத்து சந்நியாசியாகி விட்டிருந்தார். வி. வி. எஸ். ஐயர்எழுத்துலகில்பிரவேசித்து முதலாவதுதமிழ் சிறுகதையை எழுதி வெளியிட்டிருந்தார்.

(நாளை தொடரும்)

## விசேட சேவை அலுவலர்கள்

(பண்டத்தரிப்பு)

மாதகல், பெரிய விளான் ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்கு விசேட சேவை அலுவலராக மாதகலைச் சேர்ந்த திரு. ப. லோ. இ. ஆனந்தராசா நியமனம் பெற்றுள்ளார்.

ஆனைக்கோட்டை நவாலி கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்கு திரு. எம். பி. சிவபாதசுந்தரம் விசேட சேவை அலுவலராக நியமனம் பெற்றுள்ளார், மானிப்பாய் சுதுமலை கிராமசேவை அலுவலர் பிரிவுகளுக்கு விசேட சேவை அலுவலராக திரு. எஸ். பி. யோகராசா நியமனம் பெற்றுள்ளார். சண்டிலிப்பாய், சுன்னாகம் கிராம சேவை அலுவலர் பிரிவுக்கு விசேட சேவை அலுவலராக திரு. தனபாலசிங்கம்நியமனம் பெற்றுள்ளார், இவர்கள் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்

# இழுவைப்படகுகள் பெற்றுத்தருமாறு கூட்டுறவுச்சங்க சமாஜம் கோரிக்கை

(புலோலி).

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்த பொதுக்கூட்டம் சமாசத்தலைவர் திரு. கே எஸ். பொன்னுத்துரை தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்கள் அறுவர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஆனால் கடற்தொழில் திணைக்கள ஊழியர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லையாம்.

இத்திணைக்கள ஊழியர்கள் கலந்து கொள்ளாததைச் சுட்டிக்காட்டிய பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. எஸ். சிவபாலலிங்கம் இது சம்பந்தமாகக் கடற்றொழில் அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமெனவும் இவர்களுக்கு கடற்றொழிலாளர்களின் நலனில் அக்கறை இல்லையென்றும் எனவே கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் தொடர்ந்தும் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்களுக்குக் கீழேயே இயங்க வேண்டும் என்ற பிரேரணையையும் சமர்ப்பித்தார்,

பணிப்பாளர்சபை அங்கத்தவர் தெரிவில் ஜனாப். பறக்கத்துல்லா (மன்னார்) திரு. நேசராசா (முல்லைத்தீவு) திரு. ஸ்ரெனின்லாஸ் (பச்சிலைப் பள்ளி) திரு. ஜேக்கப் (யாழ்ப்பாணம்) திரு. தேவதிரவியம் (மயிலிட்டி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்,

வடபகுதியில் உள்ள மூன்று சங்கங்களுக்கு இழுவைப் படகுகளைப் பெற்றுத்தர வேண்டுமென யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையைக் கோருவதென்றும் முல்லைத் தீவுப் பகுதிக்கு இறால் பதனிடும் தொழிற்சாலையை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## அமெரிக்க ராணுவ நடவடிக்கை

டோக்கியோ, பெப். 15

ஒக்கினவாவை எல்லைக்குட்பட்ட அணுவாயுத யுத்தப் பகுதியாக மாற்ற அமெரிக்கா ஏற்பாடுகள் செய்து வருகிறது.

## பாகிஸ்தானில்

# தேர்தல் நடத்தும் சாத்தியக் கூறில்லை"

### ஷியாவுல் ஹக் கூறுகிறார்

இஸ்லாபாத் பெப் 15

"பாகிஸ்தானில் தற்போதைக்கு பொதுத்தேர்தல் நடைபெறும் சாத்தியக்கூறுகளில்லை. இங்கு அரசியல் கட்சிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து நீடிக்கப்படும். தேர்தலை நடத்தாது விடும் எண்ணம் எனக்கு இல்லை''

மேற்கண்டவாறு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜனுப் ஷியா ஷல்ஹக் நிருபர்களிடம் உரையாற்றுகையில் கூறினார்.

பாகிஸ்தானில் 1979 ம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசியல் கட்சிகளுக்கு தடை விதிக்கப்பட்டதும், பத்திரிகை தணிக்கையும் அமுல் செய்யப் பட்டதும் நெரிந்ததே. (வெ)

# காரை சுந்தரம்பிள்ளைக்கு யாழ். மேயர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாண இராச்சியமாக—இராசதானியாக அன்று அறியப்பட்ட தமிழீழத்தின் கடைசி மன்னனை சங்கிலி மன்னன் கதையை கவிதை நாடகமாக எழுதித்தந்தவர் கவிஞர் காரை சுந்தரம் பிள்ளை. 'ஈழநாடு' பத்திரிகையால்முதற்பரிசுவழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவர். ஸ்ரீலங்கா அரசின் சாகித்தியப் பரிசும்கவிஞரின்இவ்வரலாற்று நாடகத்துக்குக் கிடைத்தது.''

மேற்கண்டவாறு யாழ். மாநகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதன் யாழ்ப்பாண மாநகராட்சிமன்றத்தின் கீதத்தை ஆக்கித்தந்த கவிஞர் காரை சுந்தரம்பிள்ளைக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

யாழ். மாநகராட்சிமன்றத்தின் கீதத்தை ஆக்கித்தந்த கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையைக் கௌரவிப்பதில் இச்சபையும் நாமும் பெருமை கொள்கிறோம்.

இக்கவிஞர் கவிதைப் போட்டிகளில் பல தங்கப்பதக்கங்களைப் பெற்றவர். 1967, 1970ம் ஆண்டுகளில் சாகித்தியமண்டலப் பரிசுகளைப் பெற்றவர் என்றார்.

### ஜுபிலிவிழா

(பண்டத்தரிப்பு)

பதினேழு ஆண்டுகள் தொடர்ந்துகொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபராகக் கடமையாற்றிய அருட்திரு எல். ஏ. சிங்கராயர் அடிகளாரின் குருத்துவ பொன் ஜுபிலி விழா யாழ். மறைக்கல்வி நிலையத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இப்பொன் விழாவுக்கு திரு. ஆர். ஜோசப் தலைமை வகிப்பார்.

### நீதியரசர்கள் பதவியேற்பு

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராக நீதியரசர் திரு. பரிந்தா ரணசிங்கா நேற்று பதவியேற்றார். இந்நீதிமன்றத்தின் நீதியரசர்களாக திரு. அபேயவர்த்தனவும் திரு. ஜி பி.எல். டி.சில்வாவும் பதவியேற்றனர். (வெ)

# 'எந்தபொது வைபவத்திலும் யாழ். நூலகம் பற்றியே பேசுவேன்'

### நகரமண்டபதிறப்பு விழாவில் மேயர்

(யாழ்ப்பாணம்)

''ஜனநாயகம் என்பது நகரங்களிலிருந்து ஆரம்பமானதே. கிரேக்கர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்ட குடியரசுகளும் நகரகுடியரசுகளாவே விளங்கின. அத்தகைய ஒரு நிலைப்பாட்டில் ஒரு நகரத்தின் மக்களுக்குள் தமக்குதமதுபிரச்னைகளை அலசுவதற்கும் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்கும் ஒரு 'நகரமண்டபத்தின்' தேவை சொல்லாமலே உணரப்படும்.''

மேற்கண்டவாறு யாழ். மாநர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் யாழ். நகரமண்டபத்தை பொதுமக்களின் உபயோகத்திற்கு மீண்டும் திறந்துவைத்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:—

''அடிக்கடி அவசரகால நிலைமை நிலவும் தீவில் ஒலிபெருக்கி உபயோகித்து திறந்த வெளிகளில் மைதானங்களில் நடத்தப்படும் கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்படும் காலகட்டங்கள் மிகுந்துள் ஒரு வேளையில் நகர மண்டபத்தின் உபயோகம் ஜனநாயகம் சாகடிக்கபடாதிருப்பதற்கு எத்துணை அவசியம் என்பதும் தெரிந்ததே.

''பொதுவாழ்வில் ஈடுபட்டிருந்த காரணத்தினாலும் வரியிறுப்பாளர் என்ற வகையிலும் இந்நகரமண்டபம் பொதுமக்கள் உபயோகத்துக்கு மறுக்கப்பட்டதைக் கண்டித்து வந்தேன். அது திரைப்படமாளிகையாகப் பயன்படுத்தப்பட்டதை ஆட்சேபித்து வந்தேன். ஆகவேதான் நான் சார்ந்த இயக்கம் இச்சபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதும் இதனை மீண்டும் பொது மக்கள் உபயோகத்துக்குப் பெற்றுத்தருவேன்என உறுதி கூறினேன். மாநகர ஆணையாளர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுடைய ஒத்துழைப்புடன் நகரமண்டபத்தை மீட்டுப்பெற்று, உரிய திருத்த வேலைகளை நிறைவேற்றி இன்றும் மீண்டும் அதனைப் பொதுமக்கள் உபயோகத்துக்குத் திறந்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

''1972ம் ஆண்டு முதல் நகர மண்டபத்தின் உபயோகத்தை இழந்திருந்த பொது மக்களுக்கு இது ஒரு கொண்டாட்ட நாளாகும். உரிய முறையில் அவர்கள் அதனை கொண்டாட வேண்டுமென்பதற்காகவே இப்பண்பாட்டு நிகழ்ச்சியையும் ஒழுங்கு செய்தோம். ஏககாலத்திவ் ஐந்து ஜனாதிபதி பரிசில்களைத்தட்டிக் கொண்ட நாடக அரங்கக் கல்லூரியின் 'பொறுத்தது போதும்'' நாடகத்தை இங்கு மேடையேற்ற ஏற்பாடு செய்துள்ளோம். இதேவைபவத்தில் இவ் மன்றத்தின் கீதமும் முதல் தடவையாக பாடப்பட்டது. பாடியவர் இம்மன்றத்தின் ஓர் ஊழியர் என்பதால் சபைஊழியர்களுடன் சேர்ந்து பெருமைப்படுகிறேன். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அவர்களைத்தான் குறிப்பிட்டேன். அதுபோன்றே நாட்டிய தாரகை லீலா ஆறுமுகையா அவர்களின் சதங்கை நர்த்தனலய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளையும் உங்களுக்காகவே இங்கு ஏற்பாடு செய்து தந்திருக்கிறோம்.

''நூலக வாரம் 22ம் திகதி முதல் 28ம் திகதிவரை இடம் பெறுகின்றது. அதில் வரும் 25ம் திகதி வியாழக்கிழமை 'கொடிதினமாக'' அமைகிறது. கல்லூரி அதிபர்கள்சிரமம் பாராது இக்கல்விப் பணியில் தாமும் இறங்கி, நமது மாணவர்களையும் ஈடுபத்துகிறார்கள். அதற்கு வேண்டிய அனுமதியைத் தந்தகல்வி அதிபருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அன்று வண. பிதா லோங் அடிகளார் திரைகடல் கடந்து நூலகத்துக்கு நிதி சேர்த்து உதவினர். இன்றும் அதே சம்பத்தரிசியார் கல்லூரியில் அதிபராக விளங்கும் வண. பிதா. பிரன்சிஸ் ஜோசேப் அடிகளார் அதே பணியை உள்ளூரில் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறார். சககல்லூரி அதிபர்கள் அவருக்கு கைகொடுத்து உதவி வருகிறார்கள், அவர்கள் அனைவருக்கும் எமது நன்றி. இனிமேல் எந்த பொது வைபவத்திலும் யாழ். நூலகம் பற்றிப் பேசாதிருக்கப் போவதில்லை என முடிவு செய்துள்ளேன். ஆகவே நகரமண்டபத் திறப்பு விழாவிலும் அதுபற்றியும் சில வார்த்தைகள் சொன்னேன்'' என்றார்,

### அனைவருக்கும்...

(2ம் பக்கத் தொடர்ச்சி

''தெய்வமிகழேல்'' என்னும் பொன்மொழியை நன் மனத்துடன் போற்றிக்கொள்ளுங்கள். மாந்தை மரியன்னை நாம் அறியாத ஆதிகாலத்திலிருப்து இக்குகையில் அருள் பொழிந்து வீற்றிருந்து அடியார்களாம் அனைத்துலகு மக்களுக்கும் இன மத பேதமின்றி அன்பு மழைபொழிந்து—ஆசீர் அளிக்கின்றாள். இது சரித்திரம் கூறும் உண்மைச் சான்று என்பதை மறவாதீர்கள்.

அண்மையில் அமெரிக்காவிலிருந்து சமுகமளித்த சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் 'மறுபடியும் போர்த்துக்கேயர் இந்த நாட்டுக்கு வந்துவிட்டார்களா'' என்று வினவுகின்றார்கள். இறைவனில் ஆழ்ந்த பக்தியுள்ள சுவாமிகளை— பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்துவந்த அன்புச் சகோதரனை — சரித்திர உண்மை புரியாதோர் தடுமாறச்செய்துவிட்டனர் என்பதே எனது தாழ்மையான எண்ணமாகும்.

கோபப்படத் தெரியாதவன் கோழை—கோபப்பட மறுப்பவன் வீரன், எனவே நாம் எல்லோரும் இறைவனின் ஒரு தாய்பிள்ளைகள். பல கோணங்களிலிருந்து கோயில் சமைத்து அவனைக்கும்பிடுவோம் அது நமது கடமை, உரிமை, சுதந்திரம். அன்பபையும். அருளையும், ஆசிரையும் அவனிடமிருந்து அதிகமாகப் பெற்றுக் கொள்வோம். வேற்றுமை அகற்றி ஒரு தாய் பிள்ளைகளைப்போல் ஒற்றுமையுடன் வாழ்வோம். ஆபத்து ஒன்றுமில்லை என்ற அளப்பெரிய நம்பிக்கையை நிலைநாட்டுவோம்.

ஏ. அன்ரன்,
வங்காலை.

க. பொ. த. உயர்தரம் (ஏபரல்)

# மீளாய்வு பெறுபேறுகள் வெளியாகிவிட்டன

(கொழும்பு)

1981ம் ஆண்டு ஏப்ரல் க. பொ. த. உயர்தரப்பரீட்சை விடைத்தாள் மீளாய்வுப்பெறுபேறுகள் மீளாய்வுக்காக விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளும் கடந்தவாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ த. உயர்தரப்பரீட்சை விடைத்தாள் மீளாய்வுகள் தற்போது அரம்பித்திருப்பதாகவும் இவற்றின் பெறுபேறுகள் மார்ச்மாத நடுப்பகுதியில் அல்லது ஏப்ரல் மாத இறுதியில் அனுப்பி வைக்கப் படுமென்றும் அறிவிக்கப்பட்டது. (கி)

# பிணைமனுபற்றி அப்பீல்நீதிமன்றம்ஆலோசனை

(மாவிட்டபுரம்)

பண்டத்தரிப்பு கொலைச் சந்தேக நபர்களை பிணையில் விடலாமா? என்பது குறித்து அப்பீல் நீதிமன்றம் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் அறிக்கை கோரியதையடுத்து அவர்கள் அப்பீல் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த பி. பஞ்சலிங்கம் (24 வயது) என்பவர் கடந்த14—10—81ல் சைக்கிளில் வந்த இருவரால் பண்டத்தரிப்பு சந்தியில் வைத்து கத்தியால் குத்திக் கொலை செய்ப்ப்பட்டிருந்தார்.

இக்கொலை தொடர்பாகக் கைதாகி றிமாண்டில் உள்ள எஸ். திருச்செல்வம் எஸ். செல்லத்துரை ஆகிய இரு நபர்களையும் பிணையில் விடுமாறு சோரி ஏற்கனவே யாழ் மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்படாமையால் கொழும்பு அப்பீல் நீதிமன்றம் இவர்களைப்பிணையில் விடலாமா? என்பது குறித்து காங்கேசன்துறைப் பொலிசாரிடம் அறிக்கை கோரியிருந்ததையடுத்து பொலிசார் தமது அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கையை ஆராய்ந்த பின் பிணையில் விடுவது பற்றி அப்பீல் நீதிமன்றம் தீர்மானிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

# மலேசியப் பிரதமர் எச்சரிக்கை

கோலாலம்பூர், பெப். 15

''வளர்முக நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கக்கூடிய வாய்ப்பு மேற்கு நாடுகளுக்கு இல்லை'' என்று மலேசியப் பிரதமர் மஹதின் மஹமத் கூறினார்.

மலேசிய ஜப்பான் பொருளாதாரக் கவுன்ஸிலினதும் ஜப்பானிய—மலேசிய பொருளாதாரக் கழகத்தினதும் ஐந்தாவது வருட கூட்ட மகாநாட்டில் உரையாற்றுகையில் தான் அவர் மேற்கண்ட கருத்த வெளியிட்டார்.

'மேற்குலக நாடுகள் வளர்ச்சியின் இயக்க ஆற்றலை இழந்துவிட்டன. உலகப் பொருளாதாரத்தில் தொடர்ந்தும் அவற்றினால் ஆதிக்கம் செலுத்த முடியாத நிலை அவற்றுக்கு ஏற்பட்டுள்ளது' என்றும் அவர் கூறினார்.

# மனமுடைந்த இளைஞர் நஞ்சிடம் தஞ்சம்

(மாவிட்டபுரம்)

வயதுமுதிர்ந்தவருடன் மரியாதையின்றிப் பேசிய 22 வயது வாலிபர் ஒருவரை தாயார் கண்டித்ததனல் மனமுடைந்த அவர் நஞ்சருந்தி மரணமானார்.

தையிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஸ்ரீகாந்தகுமாரன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்தினார்.

காலமானவர் மது அருந்தும் பழக்கமுடையவர், வேலைக்கும் செல்லாது வீணே காலம் கடத்திவந்தார். இந்நிலையில் மதுவெறி தலைக்கேறியபோது அயல் வீட்டு முதியவருடன் மரியாதையின்றிப் பேசியதை தாயார் கண்டு கண்டித்தார். இதனையடுத்து வீட்டின் பின் புறம் சென்ற இவர் நஞ்சருந்தினார்.

மரணவிசாரணையில் இவ் விபரங்கள் தெரியவரவே தற்கொலை எனத் தீர்ப்பு வழங்பட்டது. ......

### 45 போத்தல் கோடா வைத்திருந்தவருக்கு அபராதம்

(மாவிட்டபுரம்)

45போத்ததல் கோடாவைத்திருந்த நபர் ஒருவருக்கு மல்லாகம் நீதிபதி 100 ரூபா அபராதம் விதித்தார்.

வடிசாராயம் தயாரிப்பதற்கான மேற்படி கோடாவை வசாவிளானில் ஆழ்வான் நடேசன் என்பவரிடமிருந்து கைப்பற்றிய காங்கேசன்துறை பொலிசார் இதுகுறித்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

மேற்படி நபர் தமது குற்றத்தை ஏற்றதையடுத்து நீதிபதி திரு. க. வி. விக்னேஸ்வரன் 100ரூபா அபராதம் விதித்தார்.

### கால்நடை வளர்ப்பு ஊக்குவிக்கத்திட்டம்

[புலோலி]

தென்புலோலியூர் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கப் பகுதிக்குள் கால் நடைவளர்ப்பை ஊக்குவிப்பதற்கான துரித நடவடிக்கைகளை சங்கச் செயலாளர் செல்வி கிருஷ்ணவேணி வீணு கோபால் மேற்கொண்டுள்ளார்.

கிராமியஅபிவிருத்திதிட்டத்தின் கீழ் உலக விஷன் ஸ்தாபனம் ஆடு, கோழி வளர்ப்புக்கென வழங்கவுள்ள கடன் வசதிகளைப் பெறவிரும்பும் அங்கத்தவர்களிடமிருந்து செயலாளர் விண்ணப்பங்களைக் கோரியுள்ளார்.

### யாருடையது?

மாவிட்டபுரம் உபதாபல் நிலையத்தின் அருகில் ச. கந்தசாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்ட சாவிக்கொத்து ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் உள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] ரவிச்சந்திரன் — விஜயா
நினைவில் நின்றவள்
(புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
10—30, 2—15, 4—45, 7—00, 9—30
FIVE ANGRY WOMEN
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 4—45
7—00: 9—30
JIM BROWN, JIM KELLY
FRED WILLIAM SON
Three The Hard Way
(Action-color-adults)
Awaits HORROR EXPRESS

WINDSOR Daily
(JAFFNA) 10.30, 2.30, 4.30, 7.00, 9.30
16th only
The touch, terrific TERENCE and the Big Bud in their newest smashing delightful of fun & Laughter
ODDS AND EVENS
17th to 19th only
The Taxi Driver (Strictly for adults)

Today only
Rajah Daily 10—30, 2—00, 4—30,
JAFFNA 7—00, 9—30
SEVEN UPS
(Color - Scope - Action Film)
From 17 to 18
SIDNEY PEITER in
THE WILBY CONSPERACY
(Color-Scope)
ராஜா 19-2-82 வெள்ளி முதல்
வெள்ளிவிழா சித்திரம்
பிரதாப்-சுரேகா நடித்த
தக்காரா
(கலர்—மலையாளம்)

யாழ். றீகல் தினசரி 10—30, 2—30, 6—15, 9—30 நான்குகாட்சிகள்
காட்சிகள் வழமைபோல் காண்பிக்கப்படும்
இன்றே பாருங்கள்!
நிறம் மாருத பூக்கள் புகள்
விஜயன்
ராஜேஷ்
சுருளிராஜன்,
மாஸ்டர் ரவிக்குமார்,
சத்தியகலா,
சுவர்ணலத
(ஈஸ்ட்மென் கலர்)
டைரக்ஷன்:-
"நீயா" புகழ்
துரை




# ஆராதனை

[அரியாலை]

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் கோட்டைத் தேவாலயத்தில் கிறிஸ்தவ மாணவர்களுக்கான மாதாந்த ஆராதனை 21ந் திகதி நடைபெறுகிறது. ஆராதனையில் திருமறைக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்திரு கனம் வி. எஸ். டி. சத்தியநாதன் அடிகளார் அருளுரை நிகழ்த்துவார்.

# சேவைநலம் பாராட்டு விழா

[பண்டத்தரிப்பு]

கடந்த ஏழு வருடங்களாக வலி தென் மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி இடமாற்றத்தில் செல்லும் திரு. கே. கோபாலரத்தினத்திற்கு அலுவலக ஊழியர்களும், பொது மக்களும் இணைந்து நடாத்திய சேவைநலம் பாராட்டு விழாவின் போது ஐயாயிரம் ரூபா பெறுமதியுள்ள தங்கச் சங்கிலி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. சண்டிலிப்பாயிலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் திரு. ஏ. மகாதேவா தலைமையில் இந்த சேவை நலம் பாராட்டுவிழா நடைபெற்றது. [இ]

# ஒத்திவைத்த சிறை

(புலோலி)

பட்டப் பகலில் வீடுடைத்து அங்கிருந்த உடுபுடவைகள், ரொக்கப்பணம் உட்பட 2500 ரூபாவைத் திருடிய நபரொருவருக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட மூன்றுமாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

உடுப்பிட்டிச் சந்தை ஒழுங்கையைச் சேர்ந்த கணேசமூர்த்தி கிரிதரன் என்பவர் அதே இடத்திலுள்ள குமாரசாமி விஜயராசா என்பவரது வீட்டுக் கதவைப் பகல்வேளையில் உடைத்து அங்கிருந்த 1900 ரூபா பெறுமதியான உடுபுடவைகளையும் 600 ரூபா பணத்தையும் திருடியதாக வல்வெட்டித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது இடையில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். எதிரிக்கு முற்குற்றம் எதுவுமில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (இ)

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
வெல்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
நூல்வேலி

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா நடித்த
கலைஞர் மு. கருணாநிதியின்
வண்டிக்காரன் மகன்

# மின்பாவனை மோசடி: கடும் நடவடிக்கை

(கொழும்பு)

மின்சாரப் பாவனையில் மோசடிசெய்வோரை எச்சரிக்கவும், கண்டுபிடிக்கவுமென மின்சார சபையும், பொலிஸ் பகுதியும் கூட்டாக நடவடிக்கைகளில் இறங்கவுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மின்சாரத் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்போரை மின்சாரசபையினர்விசாரிக்கச்செல்லும்போது தாக்குதல்களுக்கும், ஏனைய அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர் என அறியப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி கூட்டாக நடவடிக்கைகள்எடுக்கப்படுவதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மின்சாரப் பாவனை மோசடிகளில் ஈடுபடுவோருக்கு இதுவரை காலமும் விதிக்கப்பட்டு வந்த 500 ரூபா அபராதத்தை 1000 ரூபாவாகக் கூட்டவும், ஆறுமாதம் முதல் 1 வருடம் வரையிலான சிறைத்தண்டனைகளை விதிக்கவும் மின்சாரசபை ஷரத்தில் திருத்தம் கொண்டு வரப்படுமென அறிவிக்கப்பட்டது. (கி)

# முதலைத் தோல் கடத்தியவர் விமானநிலையத்தில் சிக்கினர்

(கொழும்பு)

21 முதலைத் தோல்களை சிங்கப்பூருக்குக் கடத்திச்செல்ல முயன்ற இலங்கைப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டார்.

வனவிலங்குக பரிபாலன சட்டத்தின்கீழ் முதலைத் தோலை வைத்திருப்பது தண்டனைக் குரியகுற்றமாகும். (இ)

கலாசாரப் போட்டிகளில்

# வெற்றிபெற்றோருக்கு மார்ச் 19-ம் திகதி பரிசளிப்பு

(கொழும்பு)

1981ம் ஆண்டு நடைபெற்ற தமிழ், சிங்கள இளைஞர், யுவதிகளுக்கானகலாச்சாரப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் மார்ச் மாதம் 19ந் திகதி கொழும்பு, நவரங்கசாலை மண்டபத்தில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

மேற்படி பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதிகளாக இளைஞர் விவகார, கல்விவேலை வாய்ப்பு அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க, பிராந்திய அபிவிருத்தி, இந்துகலாச்சார அமைச்சர் திரு. செ. இராசதுரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இளைஞர் விவகார வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் திரு. காமினி அத்துக்கோறளை போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களையும் நற்சான்றிதழ்களையும் வழங்கி கௌரவிப்பார்.

விழா முடிவில் கலாச்சாரப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் நிகழ்ச்சிகளும், மன்றத்தின் காலாசரக்குவினரின் கவின்மிகு கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

# இன்றைய பலன்

மாசி மாதம் 4 ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(16—2—82)

மேடம்; திகைக்க வைக்கும் சம்பவம் ஒன்று நடைபெறலாம். அரசினரின் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கம் திரும்பமுடியும். கோஷ்டிச்சண்டையில் மாட்டிக்கொள்ளாதிருக்கவும்.

இடபம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும், இசைத்துறையில் இன்று ஞானம் ஏற்படும். பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு.

மிதுனம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும். மறைமுக எதிரிகள் விஷமத்தனங்களில் ஈடுபடுவார்கள். நிதானம் வெற்றியைத்தரும்.

கடகம்: நிதியில் அபிவிருத்தியுடன் நிம்மதிபிறக்கும். பந்துக்கள் கொண்டாட்டமும் விருந்தும் உண்டு. பேச்சில் நிதானம்பெருமையை தேடித் தரும்.

சிங்கம்: தொழில்துறையில் வெற்றி. விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பலவுண்டு.

கன்னி: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும். முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் இன்று பொன்னான தினம்.

துலாம்: இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை ஏற்படும். மனதில் விரத்தி மனப்பான்மை தலைதூக்கும். உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும். மன ஒடுக்கம் நன்று.

விருச்சிகம்: அவசரமுடிவினால் அரியசந்தர்ப்பத்தைஇழக்கக்கூடும். ஆத்திரம்வழக்கு விவகாரங்களில் ஈடுபடச்செய்யும். பூமிப்பிணக்கை தவிர்க்கவும்.

தனு: பூமியால் அதிகலாபம் கிடைப்பதற்கு இடமுண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல மாறுதல் ஏற்படும். மணவாழ்க்கையில் நன்மையான மாற்றங்கள் உருவாகும். அமைதி தரும் தினம்.

மகரம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவர். சகோதர வழியால் சஞ்சலபடக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

கும்பம்: நீண்ட நாள் பிரச்னைக்கும் இன்று நல்ல முடிவு ஏற்படும்: தாய்வழிமூலம் தனவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

மீனம்; வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். இன்று சுபநாள்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

## தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி

**த பினன்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
**தங்க நகைகளுக்கும்,**
**த ங் க க ட் டி க ளு க் கு மா ன**
**ப ண வ ச தி**
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

**விற்பனை முகாமையாளர்,**

# த பினன்ஸ் கம்பனி லிமிட்.

**249, மின்சாரநிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

போன்: 7680


## நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



**செல்வன் சினித்தம்பி மத்தியூஸ்**
தோற்றம்: 13—10—1952 மறைவு: 16—2—1978

யாழ். வைத்தியசாலை ஆரோக்கியமாதா கோயிலில் திரு. P. எட்வேட் தலைமையில் திரு. வணக்கத்துக்குரிய பிரான்சிஸ் டானியல் பாதர் செல்வன் சினித்தம்பி மத்தியூஸ் ஆத்ம சாந்திக்கு 16—2—82 பிற்பகல் 5 மணிக்கு துக்கம் பாடல்பூசை அனுஷ்டிக்கப்படும். மன்னார் நண்பர்கள், மற்றும் நண்பர்கள், உற்றார் உறவினர் ஏனையோரும் சமுகம்தரும்படி வேண்டுகின்றேன். 18—2—82 பிற்பகல் 2 மணிக்கு பிப்பிலி சேமக்காலையில் மலர்தூவி செபங்கள் செய்யப்படும். நண்பகல் 12 மணிக்கு அருமை அத்தான் (சேர்மனி) ச. ஜெயானந்தன் மானிப்பாய் இல்லத்தில் விருந்துகள் நடைபெறும். அவரை இழந்து துன்புறும் அப்புளா மாமா, (லெபனன்) அருமை மருமகன் குயின்ரன், ஆசையம்மா குடும்பத்தினர், அருமை மகள்மார், அருமை மருமக்கள், அன்பின் சகோதரிகள் மு. செல்வமதி, ஜெ. யசிந்தா, உயிர் நண்பன் T நவரட்டினராஜா, தாயார். நான்காண்டு சென்றாலும் உம்மை நினைக்க எங்கள் இதயம் துடிக்கிறது. என் உயிரே உமது மன்ருட்டினல் எவ்வளவோ பலன் எங்களுக்குக் கிடைத்தன. எங்கள் செல்வமே நீர் அந்தோனியாருடன் மோட்சத்தில் வீற்றிருக்கும் வண்ணம் அனுதினமும் செபம் செய்கிறோம். உமது துயரத்தால் வாடும் தாயாரை உமது அருகில் கூப்பிட்டு அழையும் ஐயா.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். 2270

---

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்
கைதடி

## பதவி வெற்றிடம்

**கணக்காளர்- தரம் III**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டப் பகுதியிலுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

காரியாலயத்தில் ரூபா 3/— செலுத்தி விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:
01—03—1982 திங்கட்கிழமை முற்பகல் 12 மணி.

**தலைவர்**

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி. 14—02—82
(2288)

---

பின்னுறுதிக் கட்டளைக்கான

## அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய தெல்லிப்பளையைச் சேர்ந்த குலத்துங்கர் பழனியாண்டியின் மரணச்சொத்து விடயத்தில்
— மரணமெய்தியவர்

குலத்துங்கர் பழனியாண்டி
கைம்பெண் மங்களேஸ்வரி,
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.
— மனுதாரர்

மரணச்சொத்து
நியாயாதிக்கம் இல: ரி/104
எதிர்

1. பழனியாண்டி குலத்துங்கர் சோமேசன்,

(2) பழனியாண்டி குலத்துங்கர் கோகுலன்,

(3) பழனியாண்டி மகள் தெய்வநாயகி, எல்லோரும் (பராயமடையாதவர்கள்) தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

2ம், 3ம் எதிர்வாதிகள் பராயமடையாதவராகையால் தங்கள் வழக்குக் காவலன் 1ம் எதிர்வாதி மூலம் வெளிப்படுகின்றனர்
— எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982ம் ஆண்டு மாசி மாதம் 18ஆம் நாளன்று முற்பகல் 9—00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்கு தகுந்த காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

**சு. வ. கணேசன்,**
பதிவாளர்

1982ஆம் ஆண்டு மாசிமாதம் 12ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

2283

---

## விசர்நாய்க்கடி தடுப்பியக்கம்

(மாவிட்டபுரம்)

விசர் நாய்க்கடிக்கெதிரான தடுப்பியக்கம் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த பல வாரங்களாக காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தங்கியிருந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த **சுகாதாரசேவை உத்தியோகத்தர்கள்** தற்போது கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குச் சென்றுள்ளனர்.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6254 நாய்களுக்கு தடுபூசி ஏற்றப்பட்டது. 1216 நாய்கள் கொல்லப்பட்டன.

கொழும்பிலிருந்து வந்த விசேஷ சுகாதாரசேவை உத்தியோகத்தர்களே இந் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுதல் கட்டாக்காலி நாய்களை பிடித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

---

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

எனது மோட்டார் கார் லைசென்ஸ், வரித்துண்டு, காப்புறுதிப்பத்திரம் ஆகியவை நல்லூர் கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரியவரிடம் சேர்த்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். பொ. சிவசுப்பிரமணியம், பணிக்கர் வளவு, திருநெல்வேலி. 2289

### பயிற்சி

வெல்டிங், வயறிங், செய்முறை, அறிமுறையுடன் (23—2—82)-ஆரம்பம். [illegible] ஐலண்ட், 58, ஸ்ரான்லி ரோட், விகாரைக்கு முன்பாக, யாழ்ப்பாணம். 2287

எலக்றிக்கல் வயரிங் டிப்ளோமா பயிற்சி 01—03—82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2256

[illegible]

---

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னுகம்**
கல்லூரியிலிருந்து விலகியோர்க்காய

## தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள்

ஆரம்பம்: 1—3—82 (திங்கள்).

1. உடை தைத்தல்
2. மின்னிணைப்பு
3. மோட்டார் பொறியியல்.

பயில விரும்பும் மாணவர்கள் 22—2—82க்குமுன் அதிபரிடம் நேரில் விண்ணப்பிக்கவும்.

மேற்படி நெறிகளில் தகைமையுள்ள போதனாசிரியர்களும் 22—2—82க்கு முன் விண்ணப்பிக்கவும்.

**அதிபர்**
2286

---

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
கரவெட்டி.

பதிவு இல: யா/1553

## பதவி வெற்றிடங்கள்

1. **பண்டசாலை மேற்பார்வையாளர்**
   சம்பள அளவுத் திட்டம்:
   300 — 15 × 12 + 20 × 3 — 540.

2. **உள்ளகக் கணக்காய்வாளர்**
   சம்பள அளவுத் திட்டம்:
   350 — 15 × 7 + 20 × 8 — 615.

**மேற்படி பதவிகளுக்கான தகைமைகள்:**

அ. 1972—05—12 ஆந் திகதிய 15009/12A ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேஷமானது) இல் உள்ளவாறு. இதனை எப் ப. நோ. கூ. சங்கத்திலும் பார்வையிடலாம்.

ஆ. வயது 30 — 50 வருடம்.

இ. சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்களுக்கும், கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் தேவையான விபரங்களைச் சங்கத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

சங்கத்தால் ரூபா 2/—க்கு வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களிலேயே, விண்ணப்பங்களை "தலைவர், கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் 05—03—82 க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

கரவெட்டி,
15—02—82

**சோ. இராமலிங்கம்**
பதில் பொது முகாமையாளர்
2276

# 200 கிலோமீட்டர் பாதயாத்திரை

## திட்டமிட்டபடி தி.மு.கழகம் நேற்று ஆரம்பித்தது

(மதுரை)

மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையிலான இருநூறு கிலோமீட்டர் தூர பாதயாத்திரை, நேற்றுத் திட்டமிட்டபடி ஆரம்பமானது.

திருச்செந்தூர் ஆலய நிர்வாகி சுப்பிரமணியம்பிள்ளையின் மரணத்துக்குக் காரணமான அதிகாரிகள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்று கூறி, இப்பாதயாத்துரையை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மேற்கொண்டனர்.

போல் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும், இப்பாதயாத்திரையை தி. மு. கழகம் சைவிடவேண்டும் என்றும் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும் இதனை ஏற்றுக்கொள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று மறுத்துவிட்டார்.

இப்பாதயாத்திரைக்கு திரு. மு. கருணாநிதி தலைமைவகித்தார்.

### புலவர்மணி குமாரசாமிப்பிள்ளை காலமானர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அறிஞரும் சைவப் பண்பாளருமான புலவர்மணி த.குமாரசாமிப்பிள்ளை நேற்று காலமானர்.

சமய மாநாடுகளிலும் இலக்கிய மாநாடுகளிலும் இடைவிடாது கலந்துகொண்டு கருத்துமழை பொழிந்த நாவன்மைமிக்க புலவர்மணி' சேர் பொன் இராமநாதன், கலாநிதி சு. நடேசபிள்ளை ஆகியோரின் மதிப்புக்குரியவராக விளங்கினர். சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் பல ஆண்டுகள் ஆசிரியராகப் புலவர்மணி பணிபுரிந்தார்.

# "ரூபவாஹினி"

## செயல்படத் தொடங்கியது

(கொழும்பு)

இலங்கை தேசிய தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தை ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்த்தன நேற்று மாலை வைபவரீதியாக அங்குராப்பணம் செய்துவைத்தார்.

இத்தொலைக்காட்சி (ரூபவாஹினி) நிலையத்தை ஜப்பானிய அரசு இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது 26 கோடி ரூபா செலவில் இந்த நிலையம் அமைந்துள்ளது.

''ரூபவாஹினி'' நேற்று முதல் வைபவரீதியாக இயங்கத் தொடங்கியதன் மூலம் அதன் சேவை நாடுமுழுவதற்கும் கிடைத்துள்ளது.

## கச்சதீவு உற்சவம்: அரச நிர்வாக வேலைகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் நடைபெற இருக்கும் கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவத்திற்கான அரச நிர்வாக வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன்.

இவ் உற்சவத்தை முன்னிட்டு கச்சதீவில் தற்காலிகஅரச அலுவலகங்கள், நீதிமன்றம், முப்படைத் தளங்கள், சுகாதார, சுங்க இலாகா அலுவலகங்கள் போன்றவை அமைப்பதற்கும், குறிகாட்டுவான், நெடுந்தீவுத் துறைமுகங்களிலும் கச்சதீவிலும் மின்வெளிச்சம் பொருத்துவதற்கும், தண்ணீர் கொண்டுசெல்வதற்கும், போக்குவரத்து வசதிகளுக்கும் இயந்திரப்படகுகள் வழங்குவதற்கும் நேற்று திங்கட்கிழமை ஒப்பந்தங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன.

உற்சவ ஏற்பாடுகளைப் பார்வையிடுவதற்கு அரசாங்க அதிகாரிகள் குழு விரைவில் கச்சதீவு செல்லவிருக்கிறது.

இம்முறை காதுகாப்பு நடவடிக்கைகள், கடத்தல் முறியடிப்பு நடவடிக்கைகள் திவிரப்படுத்தப்படலாம் என நம்பப்படுகிறது. சென்றவருடம் இவ்வுற்சவத்திற்கு யாத்திரிகர்கள் செல்லத்தடை இருந்ததால் இம்முறை இலங்கை இந்திய யாத்திரிகர்களின் தொகை அதிகரிக்கலாம் என நம்பப்படுவதால் சுகாதார பாதுகாப்பு வசதிகள் இம்முறை விரிவானமுறையில் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிகிறது.

(வ. அ)

### இரணைமடுப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவிருக்கிறது. மேலதிக அரசாங்க அதிபர் திரு. குலநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் நீர்ப்பாசன இலாகா அதிகாரிகளும், காணிஇலாகா உத்தியோகத்தர்களும் விவசாய அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

கல்மடு பெரியகுளம் பகுதியிலும், மேலும் இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தில் சிறுபோகச்செய்கை மேற்கொள்வது பற்றியும் இக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படவிருக்கின்றது. பெரியகுளம் ஊடாக கல்மடுப் பகுதிகளில் சிறுபோகச் செய்கைக்கு நீர் வழங்க வாய்ப்பிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

இவ்வருடம் சிறுபோகச் செய்கையில் கிளிநொச்சிப் பகுதி மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டிவருவதாக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (வ—அ)


## அறிவித்தல்

த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட் ஸ்தாபனம்

(யாழ்ப்பாணக் கிளை)

தமது

ஆருவது வருட விழாவை முன்னிட்டு 13-2-82 அன்று ஒழுங்கு செய்த

# 'த பிறுன்ஸ்நைற்'

என்னும் கதம்ப நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் நிலவிய பதட்டநிலை காரணமாக நடைபெறவில்லை. நிகழ்ச்சிக்கு வருகைதந்த அன்பர்கள், ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம். 'த பிறுன்ஸ் நைற்' கதம்ப நிகழ்ச்சி பிறிதொரு தினத்தில் நடாத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


### ஆயுதம் காணப்பட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சீட்டுப் பத்திரம் வழங்கப்படும் அப் பத்திரத்தில் வாகனத்தைச் செலுத்தும் சாரதியின் பெயரும் எழுதப்படும்.

அன்றைய தினம் ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவர்கள் கடமையில் செல்லும்பொழுது சீருடையில் செல்லுவது வழக்கம். பிற்பகல் 2—45க்கு சப்பவத்தைக் கேள்விப்பட்டேன். தகவல் கிடைத்ததும் ஸ்தலத்துக்கு விரைந்தேன்.

குறிகாட்டுவான் ஸ்தலத்துக்குச் சென்றபோது ஜீப் இடது பக்க முன் பின் சில்லுகள் காற்றில்லாமலும் அதில் அபயரத்னபண்டா இறந்தும் கிடந்தார். அவர் எடுத்துச் சென்ற ஆயுதம் காணப்படவில்லை. வணிக சூரியவோ, லான்ஸ் கோப்ரல் சரத்சந்திரவோ ஸ்தலத்தில் காணப்படவில்லை. இறந்தவரை அபயரத்ன பண்டா என்று அடையாளம் காட்டினேன்.

நேற்றைய பிரேதபரிசோதனையின்போது இறந்தவர் கல்கேபிட்டிய முதியான்சிலாகே அபயரத்ன பண்டா என்று அடையாளம் காட்டினேன்.

லயன்கோப்ரல் சரத்சந்திராவும் ரூபவக சூரியாவையும் காரைநகர் கடற்படைதளத்தில் இருப்பதாக அறிந்தேன்.

பிரேதபரிசோதனையின் பின் பிரேதத்தை பாரமெடுத்தேன். (மா)

### படகை எடுத்தால்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனது வள்ளத்துக்குள்ளும் ஒளித்துக்கொண்டார்கள்''.

#### துப்பாக்கிகள் காட்டப்பட்டன

(சாட்சியமளித்தவருக்கு, வந்தவர்கள் எண்னமாதிரித் துப்பாக்கி வைத்திருந்தார்கள் என்பது தெரியாததால், பொலிஸ் தரப்பிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தஇயந்திரத் துப்பாக்கி, றிவோல்வர் காட்டப்படுகிறது.) அவர் இதேமாதிரியானவை தான் என்று சொன்ஞர்.

''ஒருவரிடம் இரு இயந்திரத் துப்பாக்கிகளும், ஒருகைத் துப்பாக்கியும் இருந்தன மற்றவர் நீண்ட துப்பாக்கியுடன் தூரத்தில் நின்றுர். நான் பயத்தின் நிமித்தம் வள்ளத்தில் இருந்தேன்.

#### மினி பஸ்ஸைக் கடத்தினர்

என்னை நோக்கித் துப்பாக்கி காட்டிய நபர் பொதுநிறம் உடையவர். நீண்ட கால் சட்டையும், சேட்டும் அணிந்திருந்தார். அவர் சுமார் 5'3'' இருக்கும். பருமனுமுடையவர்.

''தூரத்தில் துவக்குடன் நின்றவர் மற்றவரிலும்பார்க்க உயரம்கூடியவராயிருந்தார். அவரும் நீளக் கால்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார்.

''நான் வள்ளத்தில் இருக்கும் பொழுது நெடுந்திவுக்குச் செல்லவந்தபிரயாணிகள் தாங்கள்வந்த மினிபஸ்ஸை துவக்குகளுடன நின்ற இரு நபர்கள் கடத்திச் செல்கிறுர்கள் என்றும், வள்ளத்தை விரைவில் எடுக்குமாறும் சொன்ஞர்கள்.

#### இராணுவ வீரரை வள்ளத்தில் ஏற்றினேன்

''நான் லோஞ்சை எடுக்கும் பொழுது பாலத்தின் கிழ் ஒளித்திருந்த இரு இராணுவ வீரரும், நயினதீவுச்குகொண்டு சென்று விடுமாறு கேட்டார்கள். அவர்களைவள்ளத்தில் ஏற்றிக்கொண்டுபோகும்போது குறிகாட்டுவானிலிருந்து நயினதீவுக்குச் சென்றுகொண்டிருந்த 'பிளாஸ்டிக்' வள்ளத்தில் ஏற்றிவிடுமாறு கேட்டதன் பிரகாரம் நான் அவர்களை 'பிளாஸ்டிக்' வள்ளத்தில் ஏற்றிவிட்டு நெடுந்தீவுக்குப் பயணமானேன்.

''சப்பவதினமன்று இறந்த இராணுவவீரரை எச்சந்தாப்பத்திலும் நான் காணவில்லை'' (மா)

# மறைக் கல்வி பெறுவதில் கஷ்டம்

(கரவெட்டி)

''3-ம், 4-ம், 5-ம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்ட அடிப்படையில் அமைந்த கத்தோலிக்க சமய நூல்கள் வெளியிடப்படுவதில் ஏற்படும் தாமதத்தினுல தமிழ்க் கத்தோலிக்க மாணவர்கள்மறைக் கல்வி பெறுவதில் பெரும் கஷ்டமும் பாதிப்பும் அடைந்துள்ளனர்''.

இவ்வாறு யாழ். மறை மாவட்டக கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. சி. வின்சென்ற் கல்விச்சேவைகள் அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ள தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 3-ம், 4-ம, 5-ம் வகுப்புக்களுக்கான கத்தோலிக்க சமய பாடநூல்களை தமிழ் மொழியில் இதுவரை வெளியிடாததாலேயே அவர் இத் தந்தியை அனுப்பிவைத்துள்ளார்.

### கலைக்கோலத்தில் இன்று

இலங்கை வானெலி இன்றைய கலைக்கோலத்தில் 'தோன்றிமறைந்த சஞ்சிகைகளின் இலக்கியப் பணி,பற்றிப் 'புதுமெதாளி' ந. சிவபாதம் உரையாற்றுவார்.

### சட்டவைத்திய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டா (30வயது) அதிர்ச்சியினுலும் இரத்தப்பெருக்காலும் மூளை, இருதயம், ஈரலில் துப்பாக்கிச்சூட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளதாலும் மரணமேற்பட்டுள்ளது'' என்று பிரேத பரிசோதனை நடாத்திய சட்ட வைத்தியஅதிகாரி எஸ். சரவணபவானந்தன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார் (மா)

மண்டைதீவில்

## இசை விழா

(மண்டைதீவு)

மண்டைதீவு சிறுப்புலம் மைதானத்தில் அடுத்த மாத இறுதியில் இசைவிழா மூன்று நாட்கள் நடைபெறவிருக்கின்றது. ஈழத்து மூன்னணி இசைக் கலைஞர்கள் இதில் பங்குபற்றுவர்.


யாழ்ப்பாணத்திலும் தொலைக்காட்சியைப் பார்க்கலாம் !
ரி. வி. வாங்குவதற்கு பிறுன்ஸ்
வசதி செய்துதரலாம்.

அன்ரனு அமைப்பதற்கு, ரி. வி., றேடியோ, மணிக்கூடு திருத்துவதற்கு, பாடல்களைப் பதிவு செய்வதற்கு—

## வீனஸ் றெக்கோடிங, றேடியோ வாச் வேக்ஸ்

266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் முன்) யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### சைவப்புலவர்மணி குமாரசாமிப்பிள்ளை

கொக்குவிலைச் சேர்ந்த சைவப்புலவர்மணி த குமாரசாமிப்பிள்ளை அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னரது பூதவுடல் நகனக்கிரியைக்காக இன்று (16—02—82) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4—00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு, அன்னரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும்.

2293

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.